Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் – 35 இதழ் – 12 டிசம்பர் – 2022

தனிப்பிரதி
ரூ.10/-



வாருங்கள்! பங்குபெறுங்கள்!! தேவ ஆசீர்வாதம் பெறுங்கள்!!!

வத்தலக்குண்டு

## கிறிஸ்துவின் சபையார்

நடத்தும்

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மாத இதழின்

## 30-ஆம் ஆண்டு விழா

நாள் : 24.12.2022 சனிக்கிழமை
நேரம்: காலை 11.00 மணி
இடம் : கெத்சமனே தோட்டம்,
வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்.
செம்மண்குழி ரோடு. எம்.வாடிப்பட்டி - 624 211.
நிலக்கோட்டை தாலுகா. திண்டுக்கல் மாவட்டம்

சிறப்புச் செய்தி

திருமறை ஆசான் மாத இதழின் ஆசிரியர் மற்றும்
காங்கேயம் கிறிஸ்துவின் சபை போதகர்
E.Z.S. ராஜநாயகம் அவர்கள்

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. அற்புதங்கள் எங்கே | 11 |
| 3. செருபாபேல் | 14 |
| 4. வாலிபர் பகுதி | 18 |
| 5. சிறுவர் பகுதி | 22 |
| 6. தேவ ஜனமே நாம் எதை... | 24 |
| 7. கிறிஸ்து பிறந்தார் | 27 |
| 8. ஆதாமினால் மரணமும்,... | 30 |
| 9. இசைக்கருவிகள் | 33 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 35 December - 2022 Issue - 12**


ஆசிரியர் உரை

## ...நீ பாக்கியவான்!

ஒட்டுமொத்த உலகத்தையும் மேல் மட்டத்திலிருந்து, அடிமட்டம் வரை மிரட்டிப் பணிய வைத்து சொல்லொணாத் துயரத்தின் மத்தியில் மானிடம் அனைத்தும் கட்டாயக் கவசமணிந்து நகர்ந்து போக நேர்ந்த கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில், அகிலத்தை ஆள்பவரின் அளவில்லா அருளால் உயிர்ப்பிச்சை பெற்று இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், இவ்வருடத்தின் எஞ்சியுள்ள நாட்களை எப்படியாகிலும் தேவ தயவால் தாண்டிவிட்டால் போதும் என்ற ஏக்கப் பெருமூச்சோடும், எதிர் வரும் ஆண்டைக் குறித்த எதிர்பார்ப்போடும் இந்நாட்களைக் கடத்திக் கொண்டுள்ளோம். கிறிஸ்தவ உலகிற்கு இருக்கும் மாறாத வழக்கம், வருடத்தின் இறுதி வாரத்தில் வாழ்த்துக்களை பரிமாறிக்கொள்வது. ஆம், பல இனங்களிலிருந்து வரும் விதவிதமான வாழ்த்துக்களுக்குப் பஞ்சமிருக்காது. அவ்வாழ்த்துக்கள் தாங்கி வரும் எடுப்பான வார்த்தைகளும், வாக்குத்தத்த வசனங்களும் நம் இருதயங்களை ஒய்யாரமாக வருடி, நொந்து போயிருக்கும் நெஞ்சுக்கு நம்பிக்கையூட்டினாலும் கூட, அதன் வரம்புகளை மீறி, வரும் ஆண்டைக் குறித்த ஓர் அச்சம், கண்ணுக்குத் தெரியாத கலக்கம் தொடர்ந்து எட்டிப் பார்த்துக் கொண்டே இருக்கும். சரிதானே!

இப்படி தத்தளிப்பு மனநிலையோடு வரப்போகும் புதிய ஆண்டுக்காக நாம் காத்திருக்கும் வேளையில், **நீ பாக்கியவான்** என்று இயேசு ஆண்டவர் ஆசான் மூலம் நமக்குச் சொல்லும்போது, அங்கே ஏற்படும் குதூகல உணர்வைக் கொட்டி வைக்க இடமிருக்காது. அப்படித்தானே! ஏனெனில், **பாக்கியவான்** என்னும் இவ்வார்த்தை பல ஆழமான அர்த்தங்களை உள்ளடக்கியுள்ளது. அதாவது, **பேறு பெற்றவன், பாக்கியம் செய்தவன், கொடுத்து வைத்தவன், இறை அருள் பெற்றவன், மகிழ்ச்சிக்குரியவன், ஆசீர்வதிக்கப்பட்டவன்**

என்று. இப்பொருள்களையெல்லாம் உணர்ந்து ஒருவன் உள்வாங்கும் போது குதூகல உணர்வு வராமல் என்ன செய்யும்? என் இயேசு சொல்வதுபோல் புதிய ஆண்டில் நான் பாக்கியவானாக இருந்தால் அதுபோதும் என்று தான் எண்ணத்தூண்டும். நம் இயேசு சொல்லுவதைச் செய்யக்கூடியவர். ஆகையால், நம்பிக்கையோடு காத்திருப்போம்.

சரி, இப்பொழுது இயேசு இப்படி யாருக்குச் சொன்னார்? எப்போது சொன்னார்? ஏன் சொன்னார் என்பதைத் தெரிந்துகொள்ள, நமது வழக்கத்தின்படியாக பின்னணித் தகவல்களுக்குள்ளாக கடந்து வந்து விடுவோம்.

பாழும் உலகில் பரமனின் எதிர்பார்ப்பைப் பாகுபாடு இல்லாமல் மீறி வாழும் மானிடத்தை பாவத்திலிருந்து மீட்கும்படி பரத்திலிருந்து இப்பூமிக்கு அனுப்பப்பட்ட இயேசுவானவர், ஒரு மூன்றரை ஆண்டு காலம் சபையாகிய ராஜ்ஜியம் பற்றி கூவிக் கூவிப் பிரசங்கித்தார். அத்தோடு, பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் நிரப்பப்பட்டுத் தேவன் அவரோடே கூட இருந்தபடியால் நன்மை செய்கிறவராயும், பிசாசின் பிடியில் அகப்பட்டவர்களைக் குணமாக்குகிறவராகவும் சுற்றித் திரிந்தார் [அப் 10:38]. தன்னை அனுப்பின பிதாவின் சித்தம் செய்வதையே தன்னுடைய பேச்சாகவும், மூச்சாகவும், ஏன் உணவாகவும் [யோவான் 4:34] கொண்டிருந்த இயேசு ஆண்டவர், தன் ஊழியப் பணியின் ஒரு கட்டத்தில் **பிலிப்பு செசரியா** பகுதிக்கு வந்தார். பிலிப்பு செசரியா என்பதும், செசரியா என்பதும் இருவேறு பகுதிகளிலிருந்த பட்டணங்கள். நாம் பார்க்கும் இந்த செசரியா பெலஸ்தீனாவின் கிழக்குக் கோடியில் இருந்த ஒன்று. இன்னொன்று. எருசலேமுக்கு வட மேற்கே ஒரு 120 கி.மீ தொலைவில், மத்திய தரைக் கடலுக்கு அருகில், ரோம அரசாங்கத்தின் பிராந்தியத் தலைமையிடமாக இருந்த ஒன்று. அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் இது பல இடங்களில் குறிப்பிடப் பட்டிருக்கும் [8:40;10:1...].

கிழக்குக் கோடியில் இருந்த பிலிப்பு செசரியாவுக்கு வந்த போது தான், இயேசு தம்முடைய சீடர்களைப் பார்த்து இப்படியொரு கேள்வியைக் கேட்டார். **மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் ?** என்று. அச்சமயத்தில் தன் ஊழியப் பணியில் ஒரு கணிசமான பகுதியை கடந்திருந்தார். ஒருவேளை இக்கேள்விக்கான பதில் இருதயங்களை அறியும் ஆற்றல் பெற்ற [யோவான் 2:25] இயேசுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தாலும், சீடர்களின் வாயிலிருந்து என்ன வருகிறது என்பதை அறிந்துகொள்ள ஆவல் கொண்டார். அதற்கு அவர்கள்: சிலர் உம்மை **யோவான் ஸ்நானன்** என்றும், சிலர் **எலியா** என்றும், வேறு சிலர் **எரேமியா** அல்லது **தீர்க்கதரிசிகளில் ஒருவர்** என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள் [ மத் 16:14 ].

இப்பதில்களால் இயேசு அதிர்ந்தும் போகவில்லை, குளிர்ந்தும் போகவில்லை. சரி, **நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?** என்று அடுத்த கேள்வியை எழுப்பினார். சீடர்களின் அதுவரையிலான செயல்பாட்டில் இயேசுவுக்கு ஒரு திருப்தியே இருந்திருக்கும். எப்படியெனில், தன் பின்னே வரும்படி இயேசு அவர்களை அழைத்தபோது, **எல்லாவற்றையும் விட்டு** அவருக்குப் பின் சென்று கொண்டிருந்தார்கள் (மத் 19:27). இன்னும், மத்தேயு பத்தாம் அதிகாரத்தில், பன்னிருவருக்கும் **வரையறுக்கப்பட்ட கட்டளை** கொடுத்து, **காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்** என்று அனுப்பிய போது, அக்கட்டளைக்கு **அப்படியே கீழ்ப்படிந்தார்கள்.** இனி வரப்போகும் மாதங்களில் அவர்களுக்குப் **பிரதான கட்டளை** கொடுத்து அனுப்ப வேண்டியிருக்கும் என்பதை இயேசு அறிந்திருந்தபடியால், அவர்களின் நாடித் துடிப்பை அறிந்து, மேலும் அவர்களைத் தயார் படுத்தும்படியாய் இப்படிக் கேட்டிருக்கலாம்.

எது எப்படியோ எண்ணத்திலே மிடுக்கும், பேச்சிலே துடுக்கும் கொண்டு, ஏனைய சீடர்களின் பிரதிநிதியாகவே பல நிலைகளில் செயல்பட்ட பேதுரு, இங்கே எவ்விதத் தயக்கமும், தாமதமும், தடுமாற்றமும் இல்லாமல், **நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து** என்று ஓங்கி ஒரு போடு போட்டான். இயேசு அங்கே அப்படியே குளிர்ந்து போனார் என்று சொன்னால் அது மிகையாகாது. எப்படியெனில், **யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலே இருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்** என்றார் (மத் 16:16,17). இதற்கு மேல் என்ன பாராட்டுரை ஒரு மனிதனுக்கு வேண்டும்? என்னதான் பவுலடியார் புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் இயேசு ஆண்டவருக்கு அடுத்தபடியாகப் புகழ் மணம் பரப்பினாலும், **இப்பாக்கிய** நிலைக்கு ஈடாகுமா ? பரலோக தேவனுடைய அநந்த ஞானத்தின்படியும், அநாதித் தீர்மானத்தின்படியும் ஏற்படுத்தப்பட்ட **சபையாகிய ராஜ்ஜியத்தின்** திறவுகோலை இவன் கையில் கொடுத்தார் என்றால், அது என்ன சும்மாவா கொடுக்கப்பட்டது? இவ்வகையில் பேதுருவுக்கு நிகர் யாருமில்லை. நிச்சயமாகவே, பேதுரு பாக்கியவான் தான்.

இயேசுவைப் பற்றி ஜனங்கள் மூன்று விதமான மதிப்பீடுகளைத் தந்தார்களல்லவா அவைகளில் பெரிதாகப் பழுதில்லை. ஆயினும், அப்பதில்கள் அவர்கள் **இயேசுவின் பார்வையில் பாக்கியவான்களாயிருப்பதற்குப்** போதுமானதாக இல்லை. அது ஏன் என்றும் இயேசுவின் பார்வையில் எதிர்வரும் புதிய ஆண்டில் பாக்கியவான்களாயிருக்க நாம் என்ன செய்ய வேண்டுமென்பதையும் இங்கே கவனித்து நமக்கான சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

I. யோவான் ஸ்நானன் – மதிப்பீடு போதுமானதாக இருக்கவில்லை

**நீ பாக்கியவான்** என்னும் கூற்றிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதல்பாடம், இயேசுவின் பார்வையில் ஒருவன் பாக்கியவானாயிருக்க, இயேசுவை யோவான் ஸ்நானன் என்று சொல்லுவது போதுமானதல்ல என்பது.

மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்? என்ற இயேசுவின் கேள்விக்கு கிடைத்த முதல் பதில், **சிலர் உம்மை யோவான் ஸ்நானன்** என்று சொல்லுகிறார்கள் என்பது. இந்த யோவான் ஸ்நானன் அற்பசொற்பமானவனல்ல. தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாகக் காணப்பட்ட (லூக்கா 1:6), சகரியா, எலிசபெத்துக்குப் பிறந்த ஒத்தைப் பிள்ளை. தேவனால் முன் அறிவிக்கப்பட்டுப் பிறந்தவன் (லூக்கா 1:13). தன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான் என்று வாக்குப் பெற்றவன் (லூக்கா 1:15), இவை எல்லாவற்றுக்கும் மேலாக, **ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை** (மத்தேயு 11:11) என்று இயேசு ஆண்டவரால் மொழியப்பட்டவன்.

இந்த யோவான் ஸ்நானனோடு இயேசுவை ஒப்பிட்டு ஜனங்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்தியதற்குப் பலமான காரணங்கள் இருந்தன. 1. இரண்டு பேரும் நெருங்கிய உறவுக்காரர்களாக இருந்தபடியால் (லூக்கா 1:35) தோற்றம் ஒரே விதமாக இருந்திருக்கலாம். 2. இரண்டு பேரும் எளிய வாழ்க்கை முறையை நடத்தியவர்கள். 3. **மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது** என்று உரக்கக் கூறி ஊழியம் செய்தவர்கள் (மத்தேயு 4:17). 4. தீமையைக் கண்டிப்பதில் முகதாட்சண்யம் பார்க்காதவர்கள் (மாற்கு 6:17). யோவான் ஸ்நானகனின் இப்படிப்பட்ட வைராக்கிய ஊழியத்தைக் கண்ட ஜனங்கள் ஒரு கட்டத்தில் **இவர்தான் கிறிஸ்துவோ** என்று ஜனங்கள் எண்ணுமளவு வாழ்ந்தவன். (லூக்கா 3:15). ஜனங்கள் ஏற்கனவே இவர் கிறிஸ்துவோ என்று எண்ணியிருந்த நிலையில், ஏரோதுவும் இக்கருத்துக்கு தன் பங்கில் வலு சேர்த்தான். ( மத்தேயு 14:3 )

ஆக, இயேசுவை, யோவான் ஸ்நானன் என்று சொன்னது அநேக வழிகளில் சரியானதாகவும், நியாயமானதாகவுமே இருந்தது. போதுமான வேத அறிவும், இயேசுவின் ஊழியம் பற்றிய சரியான பார்வையும் இல்லாவிட்டால் இப்படிப்பட்ட கருத்தை வெளியிட முடியாது. ஆயினும், இயேசு இவர்களை **பாக்கியவான்கள்** என்று கூறவில்லை. இவர்கள் கண்ட, கேட்ட சாட்சியங்கள் இவர்களை கண்டிப்பாக அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் சென்றிருக்க வேண்டும். ஆனால், இவர்கள் தங்கள் நிலையில் தவறிழைத்து

விட்டபடியால் **பாக்கியவான்** என்ற நிலைக்கு அந்நியமாகி விட்டார்கள். என்னதான் தவறு என்கிறீர்களா ? கிடைத்த ஆதாரங்களின்படி எதிர்பார்க்கப்பட்ட **மேசியா** இவர்தான் என்று ஏற்றுச் செயல்பட்டிருக்க வேண்டும். ஆனால், ஏற்றுக்கொள்ள இவர்களுக்கு மனமில்லாமல் போயிற்று. எதையெல்லாமோ இயேசுவின் காரியமாக யோசித்தவர்கள் இதை ஏன் யோசிக்கவில்லை? இதன் மூலம் இயேசுவின் பார்வையில் **பாக்கியவான்** களாக இருக்கும் பாக்கியம் போச்சு !

அருமையானவர்களே! நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம்? இவர்தான் **மேசியா** என்று ஏற்றுக் கொள்வதற்கான போதுமான தடயங்கள் இருந்தும் ஏற்றுக்கொள்ள மறுத்து, வெறுமனே **யோவான் ஸ்நானன்** என்று சொல்வதோடு அவர்கள் நிறுத்தி, நெருங்கி வந்த **பாக்கியத்தை** கோட்டை விட்டது போல, இயேசுவின் ஒட்டுமொத்த காரியங்களை, குறிப்பாக அவர் கட்டின **ஒன்றான மெய் சபை** பற்றிய காரியங்களை ( மத் 16:18, எபே 4:4 ) ஏற்றுக்கொள்ள பிடிவாதமாக மறுத்து, இம்மைக்கான பாக்கியத்தையும் மறுமைக்கான, பாக்கியத்தையும் இழந்து போகப் போகிறோமா? சிந்திப்போம்.

**II. எலியா – மதிப்பீடு போதுமானதாயிருக்கவில்லை**

**நீ பாக்கியவான்** என்னும் கூற்றிலிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இரண்டாம் பாடம், இயேசுவின் பார்வையில் ஒருவன் பாக்கியவானாயிருக்க இயேசுவை **எலியா** என்று சொல்வது போதுமானதல்ல என்பது.

மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்! என்ற இயேசுவின் கேள்விக்குக் கிடைத்த இரண்டாம் பதில், **சிலர் உம்மை எலியா** என்று சொல்லுகிறார்கள் என்பது. யோவான் ஸ்நானன் போன்று எலியாவும் பல வகைகளில் சிறப்புக்குரியவனே. ஜனங்களின் இந்த மதிப்பீட்டிலும் பெரிதாகத் தவறு காண முடியாது. எப்படியெனில், பொல்லாத ராஜாவாகிய ஆகாப் காலத்தில் வாழ்ந்த எலியா இயேசுவைப் போலவே, வல்லமையான காரியங்களை, மரித்தோரை உயிரோடு எழுப்புவது உட்பட நடப்பித்தவன் (1ராஜா 17). கிட்டத்தட்ட ஒட்டுமொத்த இஸ்ரவேலும் வழி விலகிப் போன நிலையிலும் தேவனுக்காக நின்றவன் (1 ராஜா 19:10). வேறு யாருக்கும் இல்லாத அளவில் காகங்களைக் கொண்டும், தேவதூதனைக் கொண்டும் உணவளிக்கப்பட்டவன் (1ராஜா 7:4–7;19:4–8). இயேசு ஆண்டவரைப் போல் இயற்கையின் மீது அதிகாரம் செலுத்தியவன் (1ராஜா 18:41–45).பாகாலின் 450 தீர்க்கதரிசிகளுக்குப் பகிரங்க சவால் விட்டு மண்ணைக் கவ்வ வைத்தவன் (1ராஜா 18:17–46). இவை அனைத்துக்கும் முத்தாய்ப்பாக, உலகம் உண்டானது முதல் உயிரோடு எடுத்துக்கொள்ளப்பட்ட இரண்டு மாமனிதர்களில் இவனும் ஒருவன் (2ராஜா 2:1–15), அடடா,

இன்னொன்றும் உண்டு. இவனுடைய மெச்சத் தகுந்த ஊழியம் யூத ஜனங்களாலேயே போற்றப்பட்டபடியால், மீண்டும் வருவான் என்று ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டவன். ஆம், **இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருவதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்** என்று (மல்கியா 4:5).

ஆக, இயேசு கேட்ட கேள்விக்கான பதிலில் ஜனங்கள் **எலியாவாக** இருக்கக்கூடும் என்று சொன்னதில் பெரிதாகக் குறைகாண எதுவுமில்லை. எலியாவின் வாழ்வு பற்றியும், ஊழியம் பற்றியும் ஆழமான புரிதல் இல்லாவிட்டால் இப்படிச் சொல்லிவிட முடியாது. இப்படிச் சொல்வதற்கு **மிஞ்சின வேத அறிவு** தேவை. ஆயினும், இயேசு இந்த வேத பண்டிதர்களைப் பார்த்து **பாக்கியவான்கள்** என்று கூறவில்லை. ஏனெனில், இயேசுவின் பார்வையில் இவர்கள் பாக்கியவான்களாயிருக்கத் தகுதி பெற்றும் தவறவிட்டு விட்டார்கள். **யோவான் ஸ்நானன்** என்று சொன்னவர்களின் அதே தவறைத் தான் இவர்களும் செய்திருக்கிறார்கள். எப்படி வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்வோம் ஆனால், **மேசியா** என்று மாத்திரம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று ஒதுக்கிவிட்டார்கள். எலியாவின் வாழ்க்கையை வசனப் பின்னணியோடு அலசி, எலியாவாக இருக்கக்கூடும் என்று மதிப்பிட்டவர்களுக்கு, அதே வசனங்களை ஆய்வு செய்து, எதிர்பார்த்த **மேசியா இவர் தான்** என்று ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை?.

அன்பானவர்களே! நம்முடைய நிலை எப்படி? ஒட்டுமொத்த வேதாகமத்தை நான் ஐந்து முறை, பத்து முறை படித்து முடித்து விட்டேன் என்று மார்தட்டுகிறோம்? தினம் அதிகாலையில் எழுந்து மணிக்கணக்கில் வேதம் படித்து தியானம் செய்கிறோம் என்று சொல்லுகின்றோம். ஆனால், வேதாகமம் எதைப் பற்றியெல்லாம் சொல்லுகிறதென்பதை அறிந்து கொள்ளாமலேயே நாட்களைக் கழித்துக் கொண்டு பெருமை வேறு அடித்துக் கொள்கிறோம்! எப்படி பாக்கியவான்களாக இருக்க முடியும்? குறிப்பாக, புதிய ஏற்பாடு போதிக்கும் **இரட்சிப்பு** பற்றி நம்முடைய புரிதல் என்ன? கிறிஸ்துவின் நாமத்தை ஏற்றுக்கொண்டு, **கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்தால் தான் இரட்சிப்பு என்பதை நாம் புரிந்து வைத்துள்ளோமா?**

### III. எரேமியா – மதிப்பீடு போதுமானதாயிருக்கவில்லை

**நீ பாக்கியவான்** என்னும் கூற்றிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இன்னொரு பாடம், இயேசுவின் பார்வையில் ஒருவன் பாக்கியவானாயிருக்க, இயேசுவை **எரேமியா** என்று சொல்வது போதுமானதல்ல என்பது.

நாம் மேலே பார்த்த யோவான் ஸ்நானனுக்கும், எலியாவுக்கும் சரி நிகர் என்று இந்த எரேமியாவை நாம் சொல்ல முடியாவிட்டாலும், ஒதுக்கப்படத்தக்கவனும் அல்ல இவன். பென்யமீன் கோத்திரத்தானும், ஆனதோத் ஊரானுமான இவன் இயேசு ஆண்டவரைப்போல் ஒரு வகையில் தாயின் வயிற்றில் உருவாகுமுன்னே தெரிந்து கொள்ளப்பட்டு. கர்ப்பத்திலிருந்து வெளிப்படுவதற்கு முன்னே **பரிசுத்தம் பண்ணப்பட்டு** தீர்க்கதரிசியாயிருக்கும்படி கட்டளை பெற்றவன் ( எரேமியா 1:4). இச் சிறப்பு இயேசுவைத் தவிர எந்தத் தீர்க்கதரிசிக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வகையில் இவனை இயேசுவோடு ஒப்பிட்டு எண்ணியதில் நியாயம் இருக்கவே செய்கிறது. இவன் ஊழியத்தின் ஒரு கட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டு, தண்ணீர் இல்லாத துரவிலே, யோசேப்பின் சகோதரர்கள் செய்தது போல் போடப்பட்டான். ( எரேமியா 38:1-6). எருசலேமின் உண்மையில்லாத தீர்க்கதரிசிகளும், தேவப் பார்வையில் ஆகாதவர்களாய் காணப்பட்ட ஆசாரியர்களும் இவனுக்கு விரோதமாக வரிந்து கட்டி நின்றார்கள். ஆயினும், யூதாவின் வணங்காக் கழுத்துள்ளவர்களுக்கு மத்தியில் ஒரு 40 ஆண்டுகள் சளைக்காமல் ஊழியம் செய்தான். மனந்திரும்பாத எருசலேமின் மக்களைப் பார்த்து இயேசு புலம்பினது போல, இவனும் எருசலேமின் அழிவைக் கண்டு புலம்பினான். இதினிமித்தம் **புலம்பல் தீர்க்கன்** என்றும் அழைக்கப்பட்டான். இன்னும், ஏரோதுவின் திட்டத்திற்குத் தப்பும்படி குழந்தை இயேசுவோடு யோசேப்பும், மரியாளும் எகிப்துக்கு போனது போல, இவனும் எகிப்துக்குப் போகும்படி கட்டாயப்படுத்தப்பட்டான் ( எரேமியா 43:1-7).

இப்படி பிலிப்பு செசரியா மக்கள், இயேசுவை **எரேமியா** என்று கணித்திருக்கிறார்கள். நிச்சயமாகவே வேத வாக்கியங்களில் தேறியிருந்தாலொழிய இப்படிப்பட்ட தீர்மானமான எண்ணத்துக்கு அவர்களால் வந்திருக்க முடியாது. இவ்வளவு தூரம் வசனங்களை நோண்டி, தோண்டி நெருங்கி வரும்படி ஒப்பீடு செய்த இவர்களைப் பார்த்து இயேசு ஆண்டவர், **நீங்கள் பாக்கியவான்கள்** என்று சொல்லவில்லை.

ஏனெனில், யோவான் ஸ்நானன் என்று சொன்னவர்களும், எலியா என்று சொன்னவர்களும் செய்த அதே தவறைத் தான் இவர்களும் செய்தார்கள். **இயேசு தான் எதிர்பார்க்கப்பட்ட மேசியா** என்ற இடத்திற்கு இவர்களாலும் வர முடியவில்லை. இயேசுவின் பார்வையில் பாக்கியவான்களாயிருக்கும் பாக்கியத்துக்குத் தொடு தூரத்தில் வந்தும் அதை தூரத் தள்ளிப்போட்டனர் இந்த துர்பாக்கியவான்கள்.

அருமையானவர்களே! இந்த மூன்று சாராரும் கொடுத்த மூன்று விதமான கூற்றுகளும் சொல்லும் செய்தி என்ன? மூன்று சாராருமே கிட்டத்தட்ட சரியாகத் தானே சொன்னார்கள். பின்னே ஏன் இயேசு

அவர்களைப் பாக்கியவான்கள் என்று கூறவில்லை என்று நீங்கள் கேட்கலாம். **கிட்டத்தட்ட, சற்றேறக்குறைய** என்பதெல்லாம் நம் பார்வையில் திருப்தி தரக்கூடியவைகளாக ஒருவேளை இருக்கலாம். ஆனால், அது தேவப் பார்வையில் சுத்தமாகக் கணக்கில் வராது. நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பிய பணக்கார வாலிபனைப் பார்த்து **உன்னிடத்தில் ஒரு குறை உண்டு** என்று சுட்டிக் காட்டினவர் தான் நம் இயேசு (மாற்கு 10:17–21). நம் பக்தி வாழ்வின் ஒவ்வொரு செயலும் இயேசு ஆண்டவரின் **எதிர்பார்ப்பை முற்றிலும் பூர்த்தி செய் கிறதாக** இருக்க வேண்டும். மற்றபடி **பாஸ் மார்க், கட் ஆப் மார்க்** என்றெல்லாம் கிடையாது.

**நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து** என்று அறிக்கையிட்ட போதுதான், யோனாவின் குமாரனாகிய **சீமோனே நீ பாக்கியவான்** என்று கூறினார். அவனும், அவனோடிருந்த மற்றவர்களும் சீடர்களாக **அழைக்கப்பட்டபோது**, அழைப்பை **ஏற்று வந்தபோது**, அவரின் கட்டளைக்குக் **கீழ்ப்படிந்து** பெலஸ்தீனா தேசத்துக்குள் **ஊழியத்துக்குப் போனபோது, நீ பாக்கியவான், நீங்கள் பாக்கியவான்கள்** என்று இயேசு கூறவில்லை என்பதை நாம் கவனிக்கத் தவறிவிடக் கூடாது.

அப்படியானால், இந்த தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவை நாம் எந்தளவில் நம் வாழ்வில் அறிந்து வைத்துள்ளோம்? இயேசுவை அறிந்துகொள்வது என்றால், அவர் போதித்த அனைத்து உபதேசங்களையும் அறிந்து கொள்வதே. அது சபை, ஞானஸ்நானம், இரட்சிப்பு, ஆராதனை. பக்தி வாழ்வு என்று எதுவாக இருந்தாலும். ஆவலோடும், ஒருவித உள் உணர்வோடும் புதிய ஆண்டுக்காகக் காத்திருக்கும் நாம், வரும் ஆண்டு பாக்கியமுள்ளதாக, ஆசீர்வாதமும், மகிழ்ச்சியும், நிறைவுமுள்ளதாக இருக்க வேண்டுமானால், **இயேசுவின் பார்வையில் நாம் பாக்கியவான்களாக இருக்க வேண்டுவது அவசியம்.** யோவான் ஸ்நானன் என்றும், எலியா என்றும், எரேமியா என்றும் கூறியவர்கள் போல் நம் வாழ்வில் நாம் இயேசு ஆண்டவர் பற்றி **நாம் விரும்புகிறபடி** மதிப்பீடு செய்து, இயேசு தரும் **பாக்கிய நிலையை** இழந்து போக வேண்டாம். இயேசுவுக்கும், அவருடைய உபதேசங்களுக்கும் அப்படியே கீழ்ப்படிந்து மெய்யான பாக்கியம் பெற்றவர்களாகவே புதிய ஆண்டு முழுவதும் வாழ்வோம்! ஆமென்!!

✝

**வாசகர்கள் அனைவருக்கும், ''திருமறை ஆசான்'' குழுமத்தின் சார்பாகவும், குடும்பத்தின் சார்பாகவும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.**

**– ஆசிரியர்.**

# அற்புதங்கள் எங்கே?

J.C. சோட்

( சென்ற மாத தொடர்ச்சி )

**தே**வ ஆவியினால் அருளப்பட்ட வேத வசனங்கள் சொல்லுவதைக் கவனியுங்கள். அன்றியும் சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்தில் சேர்க்கப்படுவதையுங் குறித்து. நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது வார்த்தையினாலாவது எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவின் நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது.

அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவெததுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல் உட்கார்ந்து தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது. இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படு முன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிறயாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார் (2தெச. 2:1–12).

மீண்டும் பவுலடியார், ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனசாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும்

பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும், ஸ்தோத்திரம் அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள் [ I தீமோ.4:1–3].

தொடர்ந்து நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப் போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்துகொண்டு புத்தி சொல்லு ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க. மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து பேகுங்காலம் வரும் [ 2 தீமோ.4:1–4] என்று எழுகிறார்.

இறுதியாக, இயேசுவானவர் தாமே என்ன கூறுகிறார் என்பதையும் கவனியுங்கள். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் [ மத்.7:21–23].

ஒருவன் சுலபமாக வஞ்சிக்கப்படவும், தவறாக வழிநடத்தப்படவும் முடியும். அற்புதங்கள் சம்பந்தமாக மட்டுமல்ல கிறிஸ்துவின் உபதேச காரியங்களிலும் இது உண்மையாயிருக்கிறது. அற்புதங்கள் இன்றும் நடக்கிறது என்று சொல்லுபவர்களை நீங்கள் கவனித்தால், அவர்கள், நாங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம் என்று சொல்லுவதையும் பார்க்க முடியும். கர்த்தர் தங்களோடு நேரடியாக பேசுகிறார் என்று சொல்லும் இவர்கள், அதே கர்த்தர் தந்த வேத வசனங்களில் சொல்லாத பல பெயர்களைத் தங்களுக்குச் சூட்டிக் கொண்டு வேத வசனங்கள் சொல்லும் சபைக்கு மாறாக, பலவிதமான பெயர்களை சபை பிரிவுகளுக்கு தங்கள் விருப்பம் போல் வைத்துக் கொள்வார்கள். அவர்களுடைய பிரசங்கங்களையும், செய்திகளையும் நீங்கள் கவனித்துப் பார்த்தால் அவைகள் வேத வசனங்களுக்கு எதிராக இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளும்படி உங்களை ஊக்கப்படுத்துகின்றேன். அவர்கள் ஏமாற்றுப் பேர் வழிகள் என்பது இதன் மூலம் உறுதிப்படும்.

மேலுமாக, பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலினாலே நாங்கள் அற்புதங்கள் செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். பல குழுக்களாக பிரிந்து கிடப்பதோடு தங்களுக்குள்ளாக ஒற்றுமை இல்லாமல், ஒருவரையொருவர் எதிர்த்துக் குற்றப்படுத்திக் கொள்ளுவார்கள். இங்கே எழக்கூடிய நியாயமான கேள்வி இதோ, வித்தியாசமான குழுக்களாகப் பிரிந்து கிடப்பதோடு, தங்களுக்குள்ளாக ஒற்றுமை இல்லாமல், ஒருவரையொருவர் எதிர்த்துக் குற்றப்படுத்திக் கொள்ளுவார்கள். இங்கே எழக்கூடிய நியாயமான கேள்வி, இதோ, வித்தியாசமானவைகளை ஏவி வித்தியாசமான காரியங்களை இவர்களுக்கு போதித்து இவர்கள் ஒருவரையொருவர் எதிர்ப்பதற்குத் துணை நிற்கிறாரா என்பது. அப்படியிருக்குமானால், பரிசுத்த ஆவியானவர் தன்னைத் தானே எதிர்த்துக் கொள்ளுகிறார் என்று தானே பொருள்படும்! கண்டிப்பாக அப்படி இருக்க முடியாது. ஆகவே தேவனுடைய பரிசுத்த ஆவியைப் பெறாமல், வேறு ஆவியினால் செயல்படுகிறார்கள் என்பதை ஒத்துக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அற்புதங்கள் இன்று இல்லை என்று நாம் விசுவாசிப்பதால், அவர்கள் நம்மைப் பார்த்து தேவ வல்லமையில் நமக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லுவார்கள். ஆனால், அது உண்மை அல்ல, தேவனிலும், அவருடைய வல்லமையிலும் நமக்கு விசுவாசம் உண்டு. ஆனால், கடந்த காலங்களில், தேவன் அற்புதங்கள் நடப்பித்தது போல இந்நாட்களில் அற்புதங்கள் நடப்பிக்க அவர் தெரிந்து கொள்ளவில்லை. இந்நாட்களில், அவரால் அற்புதங்கள் செய்ய முடியாது என்பதல்ல அதன் பொருள். பூமியின் மண்ணினாலே முதல் மனிதனைப் படைத்த அவரால், இன்றைக்கும் மனிதனை மண்ணினாலே உருவாக்க முடியும். ஆனால், அவர் தேவன் என்பதையும், தான் வல்லமையுள்ளவர் என்பதையும், நிருபிக்க அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், தன்னுடைய வல்லமையை முன்பே நிரூபித்துவிட்டார்.

இப்பொழுது, அதே தேவன் ஆணையும், பெண்ணையும் படைக்க இயற்கைச்சட்ட விதிகளின்படி கிரியை நடப்பிக்கிறார். அதுபோலவே, அவராலே பிணியாளிகளைக் குணப்படுத்த முடியும், குருடருக்கு வெளிச்சம் கொடுக்கவும், மரித்தோரை எழுப்பவும், இன்னும் வல்லமையான காரியங்களை நடப்பிக்கவும் முடியும். அவர் அப்படிச் செய்ய நினைத்தால். ஆனால், அப்படிச் செல்வதற்கான அவசியம் எதுவுமில்லை. அதன் மூலம் நோக்கம் நிறைவேறியது. இன்றைக்குத் தமது வசனங்கள் மூலமாகப் போதிக்கவும், விசுவாசம் உண்டாக்கவும், இரட்சிக்கவும், நம்பிக்கை அளிக்கவும், முடியும். அற்புதங்கள் எதை நிரூபிக்கும்? அற்புதங்கள் நடைமுறையில் இருந்த காலகட்டத்திலேயே அது குழந்தைத்தனமான நிலைமைக்கு ஒப்பிடப்பட்டதோடு அவைகள் முடிந்து போகும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அத்தோடு, நிறைவானது வரும் போது குறைவானது மாற்றப்படும் என்றும் வாக்களிக்கப்பட்டுள்ளது (I கொரி.13:8–12) அப்படியே நடந்தேறுகிறது.

பெண்கள் பகுதி

# செருபாபேல்

**ரேச்சல் ராஜநாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு, இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் ஸ்தோத்திரங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தேவன் அன்புள்ளவர், இரக்கமுள்ளவர், கிருபையுள்ளவர், அதே சமயம் நீதியுள்ளவர். தான் சொன்னதை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறவர். அதாவது, மனிதர்களாகிய நம்மிடம் அவர் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார். ஆதியில் ஏதேன் தோட்டத்தில் தேவ கட்டளை மீறப்பட்டது. உடனே தேவன் அவர்களை தோட்டத்தில் இருந்து வெளியே துரத்தி விட்டார் [ஆதி 3:24 ], நோவாவின் காலத்தில் மக்கள் பெருகி, அக்கிரமம் பெருகிற்று. தேவன் மனஸ்தாபப்பட்டு, ஜலப் பிரளயத்தினால் சகலவற்றையும் அழித்தார். நோவாவின் குடும்பம் மாத்திரம் காக்கப்பட்டனர் [ ஆதி 6:23 ], பிறகு யாக்கோபின் சந்ததி எகிப்திலே அடிமைகளாய் இருந்து, மீண்டும் மோசே மூலமாக அவர்களை பார்வோனின் கையிலிருந்து விடுதலை பண்ணி வெளியே கொண்டு வந்தார். அவர்களை விடாமல் துரத்திய பார்வோனையும், அவன் சேனைகளையும் நடுக்கடலில் கர்த்தர் கவிழ்த்துப் போட்டார் [ யாத் 14:27 ]. வனாந்திர யாத்திரையிலும் தாம் தெரிந்து கொண்ட ஜனமாகிய இஸ்ரவேலர்கள் தன் கட்டளைகளை மீறும் போது எண்ணிலடங்காதவர்களை அழித்துப் போட்டார். தேவனிடமிருந்து எண்ணற்ற ஆசீர்வாதங்களை பெற்ற ஜனங்கள் இஸ்ரவேலர்கள். தேவனுடைய அனைத்து ஆசீர்வாதங்களும் நிபந்தனைகளுக்குக்குட்பட்டதாயிருந்தது. கீழ்ப்படியும் போது ஆசீர்வாதம், கீழ்ப்படியாத போது சாபம். இது பழைய ஏற்பாட்டில் நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான். தேவன் நியாயாதிபதிகளை நியமித்தார். அப்போதும் இதே நிலைதான். ஜனங்கள் தேவன் தங்களை ஆளாதபடிக்கு இராஜாக்கள் வேண்டுமென்று கேட்டனர். தேவன் கொடுத்தார். பின்பு காரியங்கள் பயங்கரமான திசையில் செல்ல அனுமதித்து விட்டார்.

சாலமோன் ராஜாவுக்குப் பிறகு இராஜ்ஜியம் இரண்டாகப் பிரிந்தது. சாலமோன் ராஜா எருசலேமில் மிகப் பிரம்மாண்டமான தேவாலயம் கட்டினான். தேவாலயத்தில் தேவன் வாசம் செய்கிறார் என்ற நம்பிக்கை பழைய ஏற்பாட்டின் காலத்தில் இருந்தது. நாம் அனைவரும் அறிந்தபடி, யூதர்கள் வருடத்துக்கு ஒருமுறை எருசலேம் தேவாலயம் சென்று பலி செலுத்த வேண்டும். இந்த வழி முறைகள் யாவும் நாம் அறிந்த ஒன்றுதான். எருசலேமை ஆண்ட

இராஜாக்களும் மக்களும் தங்களையும் தேவாலயத்தையும் தீட்டுப் படுத்தினதினால் எருசலேம் அழிக்கப்பட்டது. பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தேவாலயத்தை கொள்ளையடித்து, ஆலயத்தை தீக்கொளுத்தி, அலங்கத்தை இடித்து, அதின் மாளிகைகளையெல்லாம் அக்கினியால் சுட்டெரித்து அதிலிருந்த திவ்வியமான பணிமு ட்டுகளையெல்லாம் அழித்தார்கள் ( 2 நாளா. 36-ம் அதிகாரம்). அத்தோடு யூதர்களை சிறைபிடித்துச் சென்று விட்டனர். இஸ்ரவேல் மக்கள் பாபிலோனிலே 70 வருடம் சிறைபிடிக்கப்பட்டு அடிமைகளாய் இருந்தார்கள்.

பழைய ஏற்பாட்டு சரித்திரம் அடிமைகளாய் பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்ட யூதர்கள் மீண்டும் வந்து தேவாலயத்தையும், பெரிய பட்டணமாகிய எருசலேமையும் கட்டி தாங்கள் விட்டுச் சென்ற நிலங்களை மீட்டெடுப்பதோடு முடிவடைகிறது. இந்த காலகட்டமானது இரண்டு பிரிவுகளாக செயல்படுத்தப்படுகிறது.

**முதலாவது :** செருபாபேல் தலைமையில், யோசுவா என்பவர் ஆசாரியராய் இருக்கையில் தேவாலயம் கட்டப்படுகிறது. அதை நாம் எஸ்றா 3:6 அதிகாரங்களில் காணமுடியும். ஆகாய், சகரியா இருவரும் தீர்க்கதரிசிகளாய் இருந்தார்கள். இக்காலம் ஓர் இருபது வருடங்களை உள்ளடக்கியதாய் இருந்தது.

**இரண்டாவது :** நெகேமியாவின் தலைமையில். எஸ்றா ஆசாரியராய் இருந்தார். அலங்கம் கட்டப்பட்டு எருசலேம் மீட்டமைக்கப்பட்டது. மல்கியா தீர்க்கதரிசியாய் இருந்தார். இது ஒரு இருபத்தைந்து வருடங்களை உள்ளடக்கிய ஒன்றாக இருந்தது.

முதல், முதல் பாபிலோனில் அடிமைகளாய் இருந்தவர்களை செருபாபேல் அழைத்துக்கொண்டு வந்தான். தேவன் இதை முன்னமே எரேமியா தீர்க்கதரிசி மூலம் முன்னறிவித்திருந்தார். ''பாபிலோனிலே எழுபது வருஷம் நிறைவேறின பின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பி வரப் பண்ணும்படிக்கு உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' எரேமியா 29:10 ). காலம் நிறைவேறின பின்பு பெர்சியா இராஜாவாகிய கோரேஸ் தன் ராஜ்ஜியத்திலுள்ள யூதர்களை தங்கள் சொந்தப் பட்டணமாகிய எருசலேக்கு திரும்பிச் செல்லும்படி அனுமதி கொடுத்து விட்டான்.

**இருநூறு** ஆண்டுகளுக்கு முன்பே தேவன் இப்படி கோரேஸ் என்பவன் மூலம் யூதர்கள் விடுதலையாக்கப்படுவார்கள் என்று வாக்குத்தத்தமாக சொல்லி விட்டார் ( ஏசாயா 44:26-28 : 45:1,13).

கோரேசுடைய இந்த முதல் அழைப்பை ஏற்றுக் கொண்டு ஏறக்குறைய 50,000 யூதர்கள் செருபாபேலின் தலைமையின் கீழ்

எருசலேக்கு திரும்பினார்கள் (எஸ்றா 1:1–4). நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்து எடுத்து வந்த பொன்னினால் ஆன பாத்திரங்களை கோரேஸ் ராஜா எடுத்து செருபாபேலின் கையிலே கொடுத்தான் (எஸ்றா 1:5–11). சிறையிருப்பிலிருந்து விடுதலையானவர்கள் பாபிலோனிலிருந்து எருசலேக்கு வனாந்திர மார்க்கமாக 700 மைல்களுக்கும் அதிக தூரம் பிரயாணம் பண்ணி எருசலேமை அடைந்தார்கள். பிரயாணச் செலவு, ஆலயத்தை மீண்டும் கட்டும் செலவு, மற்ற தேவைகளையெல்லாம் தேவன் கோரேசின் மூலமாக வழங்கினார் (எஸ்றா 1:4,6).

இஸ்ரவேல் புத்திரர் பட்டணங்களில் குடியேறி, ஏழாம் மாதமானபோது, ஜனங்கள் ஏகோபித்து எருசலேமில் கூடினார்கள். செருபாபேல் தலைமையில் ஜனங்கள் சேர்ந்து கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரத்தைப் போட்டார்கள் ஆலயத்தை கட்டினார்கள். இந்த ஆலயம் சாலமோன் கட்டின ஆலயத்தைப்போல் பிரம்மாண்டமானதாக இல்லாமல் எளிமையாக இருந்தது. ஆனால், இது தேவனுடைய வீடு என்றழைக்கப்பட்டது. ஜனங்கள் தேவனுக்கு நன்றி செலுத்தி தைரியமாயிருந்தார்கள்.

இந்த செருபாபேலின் செயல்பாடுகள் குறித்து வேதாகமத்தின் நான்கு புத்தகங்களில் பேசப்படுகிறது. நெகேமியா, எஸ்றா, ஆகாய், சகரியா என்ற நான்கு இடங்களில் அவனைப் பற்றி வாசிக்கிறோம். ஆகாய் தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் கூறும்போது இவனும் செவி கொடுத்து, கர்த்தருக்குப் பயந்து, காரியத்தை நடப்பித்தான். முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்த பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தரே சொல்லுகிறார். மேலும், செருபாபேல் கட்டின ஆலயத்தில் சமாதானத்தை கட்டளையிடுவேன் என்றும் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று ஆகாய் தீர்க்கதரிசியின் மூலம் (2:9) பார்க்கிறோம். மேலும், 2:21,22 ஆகிய வசனங்களில் வரப்போகிற இயேசுவைப் பற்றிய காரியங்கள் ஆகாய் மூலம் யூதாவின் தலைவனாகிய செருபாபேலுக்கு சொல்லப்படுகிறது. மேலும், சேனைகளின் கர்த்தர் செருபாபேலைப் பற்றிக் கூறும்போது உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று உரைக்கிறார்.

செருபாபேலுக்கு மேலும் கர்த்தர், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொன்னார் ( சகரியா 4:6 ). மேலும், அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்? பூமியெங்கும் சுற்றிப் பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்களும் செருபாபேலின் கையில் இருக்கிற தூக்கு நூலைச் சந்தோஷமாய் பார்க்கிறது (சகரியா4:10) என்கிறார் சகரியா.

அன்பு சகோதரிகளே, இந்த வருடத்தின் இறுதியில் நான் செருபாபேலைப் பற்றி எழுதியதற்கு காரணம், கர்த்தருடைய நகரம். அழிக்கப்பட்டு வேறு நாட்டுக்கு அடிமைகளாய் கொண்டு போகப்பட்டாலும் அங்கிருந்து கொண்டு, மீண்டும் எருசலேக்குப் போய் ஆலயத்தை எடுத்துக் கட்ட வேண்டும் என்று தீர்மானித்து அதை செய்தும் முடித்தான் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். நாம் கூட வரப்போகிற ஆண்டிலிருந்து மீட்டமைக்கும் பணியில் ஈடுபடுவோம். தேவன் நம்மோடிருக்கிறார். அந்த விசுவாசத்தை வைத்துக்கொண்டு நாம் உறுதியாய் சபையில் இருந்து கொண்டு பின்வாங்கிப் போனவர்களையும், புதிய ஆத்துமாக்களையும் கண்டு பிடித்து சபையை கட்டும் பணியில் ஈடுபடுவோம். செருபாபேலுக்கு தேவன் கூறினபடி நம்மையும் முத்திரை மோதிரமாக வைப்பார் என்பதே. தேவன் உதவி செய்வாராக! ஆமென்!!

**இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்** ✝

## வேத வசனம்.

1. உயிர்ப்பிக்கும் – சங்.119:50
2. பாதைக்கு வெளிச்சம் – சங்.11:105
3. ஜீவன் உள்ளது – எபி.4:12
4. பரிசுத்தமாக்குகிறது – 1தீமோ.4:5
5. கண்களைத் தெளிவிக்கிறது – சங் 19:8
6. நம்மைப் புடமிடுகிறது – சங் 105:19
7. மறுபடியும் ஜெநிப்பிக்கிறது – 1பேது.1:23
8. அழியாத போஜனம் – யோ.6:26,27
9. ஒழிந்து போகாது – மத் 5:18

வாலிபர் பகுதி

# நெகேமியா போல் இருப்போம் !

Dr. **ஏபில் நாயகம்**

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களே, உங்கள் யாவருக்கும் மீட்பர் இயேசுவின் நாமத்தில் அன்பான வாழ்த்துக்கள். இந்த மாதம் இந்த இதழின் வழியாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

தேவனுடைய பெரிதான கிருபையால், இந்த ஆண்டின் இறுதிக்கு நாம் வந்திருக்கிறோம். புதுவருடத்தை எதிர்நோக்கி இருக்கிற நாம், ஒரு தீர்மானத்தோடு வரும் ஆண்டை எதிர்கொள்வது ஞானமான செயலாக இருக்கும். இது வழக்கமாக அனைவரும் செய்கிற ஒரு காரியமாகும். பலவிதமான காரியங்களுக்காக, தீர்மானங்களை எடுப்பார்கள். அப்படி தீர்மானங்களை எடுப்பது அவர்களுக்கு நன்மை பயக்கும் என்ற நம்பிக்கையோடு செய்கிறார்கள். இப்படிப்பட்ட தீர்மானங்கள், ஆவிக்குரிய நன்மைக்காகவும் சிலரால் எடுக்கப்படுகிறது. தேவனுக்கு அடுத்த காரியங்களுக்காக தீர்மானத்தோடு இருப்பதும், உறுதியோடு இருப்பதும் பல தேவ மனிதர்களிடத்தில் காணப்படுகிற ஒரு குணாதிசயம் தான். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் ஆவிக்குரிய நன்மைக்கு என்று தீர்மானங்களை எடுப்பது, தேவனுக்கு பிரியமான ஒரு காரியமே. அந்த வகையில் நமக்கு உதவ பழைய ஏற்பாட்டின் தேவ மனிதனாகிய நெகேமியாவின் வாழ்க்கையை கவனிப்போம்.

இஸ்ரவேல் மக்களை அடிமைகளாக்கி வைத்திருந்த பாபிலோன் சாம்ராஜ்யம், மேதிய, பெர்சியர்களால் மேற்கொள்ளப்பட்டது. மேதிய பெர்சிய ராஜாக்கள், இஸ்ரவேல் ஜனங்களை, மீண்டும் எருசலேக்கு திரும்புங்கள் என்று சொல்லி அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்தார்கள். எருசலேம் நகரம், எருசலேம் தேவாலயம், பாபிலோனியராலே சூறையாடப்பட்டு இருந்தது. அடிமைத்தனம் முடிந்தது, அவர்கள் மீண்டும் எருசலேம் சென்ற பொழுது, அவர்களுக்கு காத்திருந்தது, சூறையாடப்பட்ட தேவாலயம், இடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்ட நகரத்தின் மதில்களுமே.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பொழுது, இஸ்ரவேல் ஜனம் மொத்தம் எகிப்திலிருந்து கிளம்பி கானானை நோக்கி புறப்பட்டார்கள். ஆனால், இந்த முறை பாபிலோனிலிருந்து விடுவிக்கப்பட்ட பொழுது, அவர்கள் மொத்தமாக வரவில்லை. அடிமைத்தனத்திலிருந்து சென்றவர்கள், பகுதி பகுதியாக வந்தார்கள். அப்படி முதல் பகுதியில் சென்றவர்கள், தேவாலயத்தை மீண்டும் கட்டினார்கள். அதை நாம் ஆகாய் தீர்க்கன் புத்தகத்திலே வாசிக்க முடியும். நெகேமியா என்பவர், இன்னும் எருசலேக்கு திரும்பாமல் இருந்த கூட்டத்திலே இருந்த ஒரு நபர். புதிய ராஜா, புதிய சூழல்.

அர்தசஷ்டா (நெகேமியா 2:1) என்ற பெர்சிய ராஜாவிற்கு பானபாத்திரக்காரனாக (1:11) நெகேமியா இருந்தான். இந்தப் பின்னணியில் தான், இந்த நெகேமியா புத்தகம் ஆரம்பமாகிறது. இந்த சூழலில் இருந்த நெகேமியாவின் வாழ்க்கையிலிருந்து, அவன் பெற்றிருந்த குணாதிசயங்கள் எப்படி நமக்கு உதவியாக இருக்கிறது என்பதை இந்த மாதம் கவனித்து, அந்த குணாதிசயங்களை நாம் பெற்றுக் கொள்ளும்படி ஒரு தீர்மானம் எடுப்போம்.

பானபாத்திரக்காரன் என்பது அரண்மனைக்கு உள்ளிருந்து செய்யப்படும் ஒரு வேலை. ராஜா உட்கொள்ள வேண்டிய உணவு, ராஜாவுக்கு பாதுகாப்பானதா என்பதை சுவைத்து, சோதித்து, அதன்பின் ராஜாவுக்கு அதை புசிக்கும்படி கொடுப்பார்கள். அரண்மனைக்கு உள்சி அது ஒரு முக்கியமான பொறுப்பு. பிறந்ததிலிருந்தே அடிமைத்தனத்திலிருந்த ஒருவனுக்கு, அரண்மனை வேலை, நிச்சயம் சொகுசாக தான் இருந்திருக்கும். இந்த நிலையில், ஏற்கனவே எருசலேக்கு சென்றவர்கள் நெகேமியாவை சந்திக்க வருகிறார்கள். அவர்களிடம் நெகேமியா தன் தேசத்தார் எப்படி இருக்கிறார்கள் என்பதை விசாரிக்கிறார். அவர்கள்மீது ஒரு அலாதியான அக்கறை, உண்மையான கரிசனம். அதுமட்டுமல்ல, தேவனுடைய ஆலயம், தேவனுடைய நகரம் எப்படி இருக்கிறது என்பதை அவன் விசாரித்தான்(1:2).

அடிமைத்தனம் முடிந்து, மீண்டும் சொந்த தேசத்திற்கு திரும்பின ஜனங்கள், நன்றாக இருக்கிறார்கள் என்று செய்தி கொண்டு வருவார்கள் என நினைத்து இருந்தவனுக்கு, அதிர்ச்சியும், கவலையும் காத்திருந்தது. ஆம், சிறையிருப்பிலிருந்து சென்றவர்கள், மகா தீங்கையும் நிந்தையும் அனுபவிக்கிறார்கள் என்று (1:3). தன்னுடைய தேசத்தார், குறிப்பாக தேவனுடைய ஜனத்தின் நிலைமையை கேட்ட நெகேமியா, உட்கார்ந்து அழுது, சில நாட்கள் துக்கித்து, உபவாசித்து, தேவனை நோக்கி ஜெபம் செய்தான்(1:4). இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் முதலாம் அதிகாரம் முதல் வசனத்தையும், இரண்டாம் அதிகாரத்தின் முதல் வசனத்தையும் கவனித்தால், சராசரியாக **நான்கு மாதங்கள்** அவன் துக்கத்தோடு இருந்தான் (கிஸ்லேயு – நிசான்) என்று தெரிந்துகொள்ள முடியும், அரண்மனையிலே ஒரு சொகுசான நிலையில் இருந்த பொழுதிலும், தன்னுடைய ஜனமான தேவனுடைய ஜனங்களுக்காக அவன் துக்கத்தோடு இருந்துள்ளான். இது, நெகேமியாவின் அன்பையும், பண்பையும், கரிசனையையும் காட்டுகிறது. இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்று நினைத்த நெகேமியா, ராஜாவிடம் சென்று தான் எருசலேக்கு போகவேண்டும் என்று உத்தரவு பெற்று, எருசலேக்குச் சென்றான்.

சௌகரியமான ஒரு சூழலில் இருக்கும் பொழுது, அதை பிறருக்காக துறப்பது ஆகச்சிறந்த ஒரு செயல். கிறிஸ்துவை பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய ஒரு

குணாதிசயம். கிறிஸ்துவுக்கும் இந்த குணாதிசயம் இருந்தது. பிதாவின் சித்தம் நிறைவேற, தேவனுக்கு சமமாக இருந்த அந்த அலாதியான தெய்வீகச் சூழலை துறந்து, நமக்காக அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ ரூபமாய் காணப்பட்டு, நமக்காக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். அதைப்போல, ஆபிரகாம் தேவனாலே அழைக்கப்பட்ட போது, தன் தகப்பன் வீட்டில் இருந்து கிளம்பி, தான் காணாத ஒரு தேசத்திற்கு போனார். இப்படி பல தேவ மனிதர்கள், தேவனுக்காகத், தங்களுடைய சவுகரியமான சூழலை விட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்காக செயல்பட்டிருக்கிறார்கள். ஆங்கிலத்திலே இதை out of comfort zone என்று சொல்வார்கள். நெகேமியாவுக்கும் இந்த குணாதிசயம் இருந்தது. பிரியமானவர்களே, நம்மில் இந்த குணாதிசயம் எத்தனை பேருக்கு இருக்கிறது? பிறருக்காக கரிசனையோடும், அக்கறையோடும் நாம் இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பாக, ஆவிக்குரிய சரீரமாகிய சபையிலே இந்த குணாதிசயத்தை நாம் வெளிப்படுத்த வேண்டும். ஆதலால், ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும் என்று 1 கொரிந்தியர் 12:26 இல் வாசிக்கிறோம். இது நெகேமியாவிடம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய **முதலாவது** குணாதிசயம்.

ஏற்கனவே, அடிமைத்தனத்திலிருந்து வந்தவர்களால் தேவாலயம் கட்டப்பட்டது. இப்பொழுது நகரத்திற்கு பாதுகாப்பாக அலங்கம் தேவை. எனவே, அலங்கத்தை கட்டுவதற்கு நெகேமியா ஜனங்களை உற்சாகப்படுத்தி, அதற்கான வேலைகளை துவங்கினார். அலங்கத்தை கட்டப் போகிறார்கள் என்கிற செய்தி சிலருக்கு எரிச்சலை கொடுத்தது. ''ஓரோனியனான சன்பல்லாத்தும், அம்மோனியனான தொபியா என்னும் ஊழியக்காரனும், அரபியனான கேசும் இதைக் கேட்டபோது, எங்களைப் பரியாசம்பண்ணி, எங்களை நிந்தித்து: நீங்கள் செய்கிற இந்தக் காரியம் என்ன? நீங்கள் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணப் போகிறீர்களோ என்றார்கள்'' (2:19). இந்த மனிதர்களாலே குறைந்தது ஒரு ஆறு முறை அலங்கத்தை கட்டுவதற்கு தடை ஏற்பட்டது. அலங்கம் கட்டப்பட்டு விடக்கூடாது என்று நினைத்த அந்த மனிதர்கள் பரியாசம் செய்தும், நம்பிக்கையற்று போகதக்க வார்த்தைகளை பேசியும், சண்டையிட ஆட்களை அனுப்பவும், நேரத்தைக் கெடுக்கவும், ஜனங்களுக்குள்ளே கலகத்தை ஏற்படுத்தவும் என்று பலவிதமான ட்டுக்கட்டைகளை போட நினைத்தார்கள். தேவனுடைய பிள்ளைகள், தேவனுடைய வேலையை செய்யாமல் இருக்க வேண்டுமென்பதற்கு கிட்டத்தட்ட எல்லா முயற்சிகளையும் எடுத்தார்கள். இங்கே நாம் கவனிக்க வேண்டியது, இப்படிப்பட்ட சூழலில், நெகேமியா என்ன செய்தார் என்பது. நாம் வசனங்களை வாசிக்கும் பொழுது, எப்பொழுதெல்லாம் அந்த மனிதர்களாலே தடை ஏற்பட்டதோ, அப்பொழுதெல்லாம் தேவனை நோக்கி நெகேமியா ஜெபம் செய்தார். தன்னிடமுள்ள ஜனத்தின் எண்ணிக்கையையும், பெலத்தையும், தன்னுடைய

சாமர்த்தியத்தையும் அவன் நம்பாமல், தன்னுடைய இக்கட்டான சூழலில் நெகேமியா தேவனை நோக்கிப் பார்த்தார். தேவன் நெகேமியாவின் ஜெபத்தைக் கேட்டு, அவர்களுக்காக கிரியை செய்தார். தேவனுடைய வேலை நடைபெறக் கூடாது என்று எண்ணுபவர்கள் எல்லா காலங்களிலும் இருந்திருக்கிறார்கள். முதல் நூற்றாண்டிலும் அப்படிப்பட்டவர்களை குறித்து நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்க முடியும். எனவே, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிற வேலையை நாம் செய்யும் பொழுது, தடைகளும், நமக்கு எதிரான சூழலும், நம்மைச் சோர்வடைய செய்யும் சூழ்நிலையும் உண்டாகும். அப்படிப்பட்ட நேரங்களில் நாம் சோர்வடையாமல், நம்முடைய பெலனை நம்பாமல், தேவனிடம் நாம் திரும்பும்பொழுது, அவர் நமக்காக கிரியை செய்கிறார். ''நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்'' என்று பிலிப்பியர் 4:6 இல், நாம் வாசிப்பது போல எந்த சூழ்நிலையிலும் நெகேமியாவைப் போல செயல்பட வேண்டும். இது நாம் நெகேமியாவின் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய **இரண்டாவது** குணாதிசயம்.

பாதகமான எந்த சூழ்நிலை வந்தாலும், செய்து கொண்டிருக்கிற வேலையிலிருந்து பின்வாங்காமல், தேவன் மீது பாரத்தை போட்டு, அலங்கத்தை கட்டும் வேலையிலேயே கவனம் செலுத்தினார்கள். அப்படியே அலங்கமானது ஐம்பத்திரண்டு நாளைக்குள்ளே கட்டப்பட்டு, எலூல் மாதம் இருபத்தைந்தாந்தேதியிலே முடிந்தது[6:15]. பிரியமானவர்களே, நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை என்கிற ஓட்டத்திலே, பல பாதகமான சூழ்நிலைகள் வரும். அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாய் இருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்று II தீமோத்தேயு 3:12 இல் வாசிக்கிறோம். எனவே, பாடுகள் நிறைந்த, சோதனைகள் நிறைந்த இந்த ஓட்டத்தில் ஓடுகின்ற நாம் ஒவ்வொருவரும், நம்முடைய இலக்கை ஒரு போதும் மறந்துவிடவோ, தவறவிடவோ கூடாது. பவுலைப் போல் இலக்கை நோக்கி தொடர்கிறவர்களாக, விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். தடைகளும் பாதகமான சூழலும் வரும்பொழுது தேவனிடத்தில் அதை தெரியப்படுத்தி, நித்திய ஜீவன் என்ற இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுகிறவர்களாக இருப்போம்.

வருகின்ற புதிய ஆண்டிலே, நெகேமியாவின் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொண்ட இரு முக்கியமான குணாதிசயங்களை நம்முடைய வாழ்க்கையிலும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற தீர்மானத்தை ஒவ்வொருவரும் எடுப்போம். இதை நம்முடைய ஆவிக்குரிய நலனிற்காக செய்ய வேண்டும். **அனைவருக்கும் என்னுடைய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

சிறுவர் பகுதி

# கடலின்மீது நடப்பது!

Dr. பிரெய்ஸி

ஹலோ! குழந்தைகளே, நீங்கள் அனைவரும் நலமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். பேதுரு தண்ணீரில் எப்படி நடந்தார் என்பதை இந்த மாதம் பார்ப்போம்.

**மத்தேயு** 14:22-33 வசனங்களில் இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்த மாபெரும் அற்புதத்திற்குப் பிறகு சீஷர்கள் படவில் பயணித்ததை காண்கிறோம்.

சீஷர்கள் புயலில் சிக்கியதையும், படவு எதிர்க்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவு பட்டதையும் நாம் காண்கிறோம். இயேசு கடலில் நடப்பதைக் கண்டு சீஷர்கள் பயந்தனர்.இந்தச் சம்பவத்தில்லிருந்தும் பேதுருவிடமிருந்தும் நாம் கற்றுக்கொள்ள குறைந்த மூன்று பாடங்கள் உள்ளன.

1 ) பேதுரு இயேசுவின் கட்டளைக்காக காத்திருந்தார்

2 ) பேதுரு இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்

3 ) நாம் இயேசுவை பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும்.

பேதுரு இயேசுவை விட்டு தன் கண்களை விலக்கிப் பார்த்தபோது புயலைக் கண்டு அவர் மூழ்கத் தொடங்கினார்.

அன்பு பிள்ளைகளே, வாழ்க்கையில் பிரச்சனைகளை சந்திக்கும் போது நாம் அவருடைய வார்த்தைகளைப் படித்து அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தையிலிருந்து பெலன் பெற வேண்டும். நாம் கீழ்ப்படிதலில் தொடர்ந்து இருக்க வேண்டும். நம் கண்களை இயேசுவை விட்டு விலக்கி வேறெங்கும் பார்க்கக்கூடாது.

God bless you

அன்புடன்,

பிரெய்ஸி அக்கா

✝

## இம்மாத வினாக்கள்

1.சீஷர்கள் ஏன் பயந்தார்கள்?

2. எந்த சீஷன் தண்ணீரின் மீது நடந்தார்?

3. எந்த அற்புதத்திற்குப் பிறகு இந்த அற்புதம் நடந்தது?

4. இயேசு பேதுருவை மறுபடியும் படவுக்கு கொண்டு வந்த பிறகு என்ன நடந்தது?

5. பெருங்காற்று அமர்ந்த பிறகு சீஷர்கள் என்னச் செய்தார்கள்?

✝

## நாளும், நடப்பும்

1. விண்ணில் சீறிப்பாய்ந்த ஸ்பேஸ் – எக்ஸ் ராக்கெட்... பூமியின் மேற்பரப்பு நீரில் ஆய்வு.

2. செயற்கையான கருப்பை வசதியை உருவாக்கும் முயற்சியில் உலக ஆராய்ச்சியாளர்கள் தீவிரம்.

3. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இருமல் மருந்துகளில் குறைபாடு இல்லை என கண்டறியப்பட்டுள்ளது.

4. அரசு பள்ளிகளுக்கான அரையாண்டு விடுமுறை தேதி அறிவிப்பு – 24ம் தேதி முதல் ஜனவரி 1தேதி வரை

5. சென்னை மாநகரில் மீண்டும் வருகிறது மூத்த குடி மக்களுக்கான கட்டணமில்லா பஸ் பாஸ்.!

6. உலகக் கோப்பை கால்பந்து இறுதிப் போட்டியில் அர்ஜெண்டினா வெற்றி. ரசிகர்கள் உற்சாகம்.

✝

# தேவ ஜனமே நாம் எதைத் தேடிக் கொண்டிருக்கிறோம்?

சகோ.பென்னி மார்ட்டின்

**பி**ரியமான திருமறை ஆசான் வாசகர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். மனிதர்களாகிய நாம் பூமியில் வாழும் வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் நமக்கு முன்பு வாழ்ந்த மனிதன் என்னக் காரியங்களை கண்டுபிடித்திருக்கிறான். மேலும், இந்த விஞ்ஞான உலகில் நாம் சற்றும் கற்பனை செய்து பார்க்க முடியாதவைகளை எல்லாம் மனிதன் கண்டுபிடித்து இருக்கிறான் என்று தான் சொல்கிறேன். ஆனால்,மனிதன் இத்தனை காரியங்களையும் சத்தமின்றி கண்டுபிடித்திருந்தாலும் வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டுபிடிக்கும் முயற்சியில் தோல்வியையே தழுவியிருக்கிறான்.

குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்கிற டார்வின் கொள்கையை எல்லாம் நம்மால் நம்ப முடியாது. இவ்வுலகில் வாழ்ந்த அநேக தத்துவஞானிகள் வாழ்க்கையின் அர்த்தம் பற்றி பல தத்துவங்களை உதிர்த்திருக்கிறார்கள். ஆனால், வாழ்க்கையின் அர்த்தத்தை சாலொமோன் ஞானியைப் போல் எந்த ஒரு மனிதனாலும் கண்டறிந்து கூறியிருக்க முடியாது. இஸ்ரவேலின் சிங்காசனம் அதன் முழு வல்லமையிலும்,கம்பீரத்திலும் இருக்கும்போது சாலொமோன் அரசன் அரியணையில் அமர்ந்தார். சாலொமோனுக்கு ஞானம் செல்வம் புகழ் போன்றவைகள் ஏராளமாக தாராளமாக இருந்தன. இவைகளின் மத்தியில் சாலொமோன் ராஜா வாழ்க்கைக்கான அர்த்தத்தைத் தேடினார். இது பிரசங்கி புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர் இவ்விதமாக எழுதினார்'' மாயை மாயை எல்லாம் மாயை சூரியனுக்குக் கீழே மனுஷன்படுகிற எல்லாப்பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன? ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது'' (பிரசங்கி 1:2-4).

நான் இவ்வுலகத்தை விட்டுப் போனபிறகு எனக்கு என்ன பயன் உண்டாகும்? நான் இவ்வுலகத்தை விட்டுக்கடந்து போன பிறகு என்ன வித்தியாசத்தை உண்டாக்குவேன்? இனிவரும் தலைமுறை மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்துவேன்? இது போன்ற கேள்விகள் மனித ஆத்துமாவுக்கு பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறது. சாலொமோன் ராஜா உலகச் சிற்றின்பங்களில் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடினார். அவருடைய கண்டுபிடிப்புகள் எல்லாம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகள், ஏனென்றால், அவர் மட்டுமே உலகத்தின்

சிற்றின்பங்கள் எல்லாவற்றிலும் சிறந்தவைகளை முழுமையாக அனுபவித்தார். இந்த உலகில் எந்த ஒரு மனிதனும் சாலொமோன் ராஜாவைப் போல் விழிப்பார்த்து விரும்பிய வண்ணம் அனுபவித்ததில்லை. எனவே, அவர் வாழ்க்கையின் அர்த்தத்தை எந்தெந்த கோணங்களில் தேடி இருக்கிறார் என்பதை அலசிப் பார்த்து நம் வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்பதை கண்டு கொள்வோம்.

**1. சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை ஞானத்தில் தேடினார்**

ஒன்று ராஜாக்கள் மூன்றாம் அதிகாரத்தில் சாலொமோன் ஞானி ஞானத்தை பெற்றுக் கொள்வதற்கு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை என்று பார்க்கிறோம். சாலொமோன் தேவனிடம் ஞானத்தை கேட்டார் தேவன் அவருக்கு அதை ஈவாகக் கொடுத்தார். ஆனால், தேவனால் கொடுக்கப்பட்ட ஞானமாக இருந்தாலும் கூட தேவனுக்கு சேவைச் செய்ய அது பயன்படாவிட்டால் வாழ்க்கைக்கான அர்த்தத்திற்கு விடை காணமுடியாது என்று சாலொமோன் சொல்கிறார். அதாவது, உலக கல்வியில் மட்டும் விடை காணமுடியாது என்று சாலொமோன் சுருக்கமாகச் சொல்கிறார். அதாவது, அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு: அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன் என்று சொல்லுகிறார். கல்வி வாழ்க்கையின் ஒரு பகுதியே தவிர, அதுவே வாழ்க்கையின் எல்லாம் அல்ல என்பதையும், அது எல்லாவற்றுக்கும் எல்லை வகுக்க முடியாது என்பதையும், அதுமட்டுமே வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டறிய உதவாது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**2. சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை செல்வத்தில் தேடினார்**

சாலொமோன் ராஜா செல்வச் செழிப்பாக வாழ்ந்ததாக பரிசுத்த வேதாகமம் பதிவு செய்திருக்கிறது அவர் தன் அருமையான அரண்மனையை கட்டி முடிக்க 13 வருடங்கள் ஆகியிருக்கிறது. அந்த அரண்மனையின் ஆடம்பர தோற்றத்தைப் பற்றி நாம் ஒன்று ராஜாக்கள் ஏழாம் அதிகாரத்தில் வாசிக்க முடியும், இது இன்றைய அம்பானி மற்றும் அதானிகளின் மாளிகைகளை விட ஆடம்பரமானது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். அது மட்டுமல்ல. பூமியின் சகல ராஜாக்களைப் பார்க்கிலும் ராஜாவாகிய சாலொமோன் ஐஸ்வர்யத்திலும் ஞானத்திலும் சிறந்தவனாக இருந்தான் என்று வேத வசனம் சொல்கிறது (2ராஜாக்கள் 10:23).

செல்வத்தின் வாயிலாக வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டறிய முற்பட்ட சாலொமோனின் வார்த்தைகளை கவனியுங்கள் பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள்; அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதைக் காண்பதேயன்றி அவர்களுக்குப்பிரயோஜனம் என்ன? (பிரசங்கி 5:10,11),

### 3. சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை பெயரிலும், புகழிலும் தேடினார்

சிலர் இவ்வுலகில் வாழும்போது எதையாவது சாதித்து பேரும் புகழும் பெற்றால் மட்டுமே தங்கள் வாழ்க்கை முழுமை அடைந்ததாக கருதுகிறார்கள். அதுவே தங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி தருவதாக நெகிழ்ச்சியுடன் சொல்கிறார்கள். அப்படிப் பார்த்தால் சாலொமோன் ராஜா இஸ்ரவேல் தேசத்தை ஆட்சி செய்த நாட்கள் மிகச் செழிப்பான நாட்களாகும். அந்நாட்களில் அவர் இப்புவியில் புகழின் உச்சியில் இருந்தார். அவருடைய ராணுவச் செலலவினங்கள் அதிகமானது, சாலொமோனிடத்தில் 1400 ரதங்கள் இருந்தன. அதேப்போல் அவரிடம் பன்னீராயிரம் குதிரைவீரரும் இருந்தார்கள். ஆனால், அங்கே ஆச்சரியம் என்னவென்றால் அந்நாட்களில் அவரோடு போர் செய்ய யாருமில்லை. எல்லா தேசங்களும் அவரை மதித்து அவருக்கு மரியாதை கொடுத்தன. அவரிடம் கப்பம் செலுத்தப்பட்டது( 1 ராஜாக்கள்10:22–26). சேபாவின் ராணி சாலொமோனின் கீர்த்தியை கேள்விப்பட்டு அவரை சந்தித்திருக்கிறாள் (1 ராஜாக்கள்10:1–9).

சாலொமோன் ராஜா தனக்கு கிடைத்த பணத்திலும் புகழிலும் திருப்தி அடையவில்லை. மாறாக, அவர் இவ்வுலகில் வெறுமையானவராகவே உணர்ந்து வாழ்க்கையின் அர்த்தத்தை தேடிக் கொண்டிருந்தார். வாழ்க்கையே வெறுத்தவராய் அவர் சொல்லும் வார்த்தைகளை கவனியுங்கள். ஆகையால், இந்த ஜீவனை வெறுத்தேன், சூரியனுக்குக் கீழே நான் பட்டப்பிரயாசத்தை எல்லாம் வெறுத்தேன், இதுவும் மாயையே என்று சொல்கிறார் பிரசங்கி 2:15–23).

கடைசியாக, சாலொமோன் ஞானி வாழ்க்கையின் அர்த்தத்தை தேடுவதில் விடை கண்டு விட்டார். அந்த விடையை அவருடைய வார்த்தைகளிலேயே கேட்போம் '' காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப்பயந்து அவர் கற்பனைகளை கைக்கொள்: எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே(பிரசங்கி 12:13). எனவே, பிரியமான தேவனுடைய பிள்ளைகளே, நம் வாழ்க்கையின் அர்த்தத்தை எதில் தேடிக் கொண்டிருக்கிறோம்? அல்லது அர்த்தமே இல்லாமல் அரைகுறையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளை கைக் கொள்ளும்போது நம் வாழ்க்கை ஓர் அர்த்தம் நிறைந்ததாக இருக்கும் என்பதைப் புரிந்து செயல்படுவோம். தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமேன்!!

✝

# கிறிஸ்து பிறந்தார் !

சகோ.K.M.பிலிப். பவானி

**அ**ன்பானவர்களே! இவ்வருடத்தின் கடைசி மாதத்திலும் ஆசான் மூலம் உங்களை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். இப்பரந்த உலகில் மனிதன் எதையும் பரபரப்பாய் செய்வதிலேயே குறியாயிருக்கிறான். ஏன்? எதற்கு? எப்படி? என்று ஆராய்ந்து அதன் உண்மையை உணர்வதில்லை. தான் செய்வது சரியா, தவறா, தேவையா என்று கூட சிந்திப்பதில்லை. இது உலகத்தாருக்கு சரி. ஆனால், ஆவிக்குரிய நமக்கு இது பொருந்தாது. நமக்கு யாதொரு செயலையும் பகுத்தறிவது அவசியமான ஒன்றாகும். இதைத்தான், ...நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து, ...இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் (யூதா 22; ரோமர் 12:2) பகுத்தறியும் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்.

அன்பான தேவஜனமே! ஆவிக்குரியவர்களாகிய நாம் ஆவியானவர் சிந்திக்கும் வண்ணமாகவே சிந்தித்து செயல்பட வேண்டும். ஆகவே, நாம் தேவ ஆவியானவரால் நமக்கு கொடுக்கப்பட்ட இந்த வேத வசனங்களோடு ஒன்றையும் கூட்டவோ, எடுத்துப் போடவோ கூடாது ( வெளி 22:18,19 ). எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவும் கூடாது (1 கொரி.4:6 ). காரணம், யோசனையில் பெரியவரும், செயலிலே வல்லவருமாயிருக்கிறீர்; அவனவனுக்கு அவனவனுடைய வழிக்கு தக்கதாக அவனுடைய கிரியைகளின் பலனுக்கு தக்கதாகவும் அளிக்கும்படி, உம்முடைய கண்கள் மனுபுத்திரருடைய எல்லா வழிகளின் மேலும் நோக்கமாயிருக்கின்றன, ( எரே 32:19) என்று நம் தேவனைக் குறித்து நாம் அறிந்தவர்களாயிருக்க வேண்டும். அவர் நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதபடிக்கு, உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம் (யாக்கோபு 5:12 ).

இன்றைய கிறிஸ்தவ மத உலகில் (மார்க்க உலகிலல்ல) இன்று கிறிஸ்து பிறந்தார்'' என்று சொல்லி டிசம்பர் 25 –ஆம் நாளில் கிறிஸ்துமஸ் என்ற பண்டிகையை மிகவும் பரபரப்புடன், மற்ற மதத்தினருடன் போட்டி போட்டுக் கொண்டாடுகிறதை நாம் பார்க்கிறோம். கிறிஸ்து பிறந்தார்'' என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஏனெனில், கிறிஸ்து இப்பூமியில் பிறந்து வாழ்ந்து, சிலுவையில் மரித்ததினால் தான், நமக்கெல்லாம் பாவமன்னிப்பும், இரட்சிப்பும், பரிசுத்த வாழ்க்கையும், அதைக் காத்துக்கொள்ள சபையும் கிடைத்தது. மரித்து அடக்கம் பண்ணப்பட்ட கிறிஸ்து மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தது தான், மரித்த பரிசுத்தவான்கள் அனைவரும்

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் உயிரோடெழுந்து, அவரோடு கூட பரலோகில் பிரவேசிக்க முடியும் என்ற விசுவாசம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது [அப் 17:31,ரோமர் 6:4,5]. ஆனால், டிசம்பர் 25–ல் இயேசு பிறந்தார் என்பதோ, பண்டிகையாகக் கொண்டாடுவதோ பரிசுத்த ஆவியானவரால் எழுதப்படாத, கட்டளையிடப்படாத ஒன்றாகும். இப்படிக் கூட்டுவதும், மிஞ்சி எண்ணுவதும், இல்லாததை இல்லாததென்று சொல்லாததும் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான செயல் என்பதை நாம் உணரவேண்டும். வேதத்தில் 4– சுவிசேஷங்களிலும், 23 புத்தகங்களிலும் எங்குமே இயேசுவின் பிறப்பு டிசம்பர் 25 என்றோ, இதை பண்டிகையாக ஆசரிக்க வேண்டும் என்ற கட்டளையோ இல்லை. இந்த உண்மையைப் புரிந்து கொள்வோம்.

மேலும், சில குறிப்புகளை கவனியுங்கள்: 1. இயேசு பிறந்தார் [மத்.1:25, லூக்கா 2:7,11]. 2. பிறந்தநாள்:– இல்லை. 3. பிறந்த இடம்:– பெத்தலகேம் [மீகா.5:2, மத்.2:1, லூக்கா 2:5,6]. 4. பெற்றெடுத்தவர்:– கன்னி மரியாள் [ஏசா.7:14,மத்.1:20,23]. 5. பெயர்:– இயேசு [மத்.1:21,25; 2:1]. 6. காலம்:– ஏரோது ராஜாவின் காலம் [மத்.2:1; முதலாம் குடி மதிப்பு எழுதப்பட்ட காலம்[லூக்கா 2:1–7]. 7. குழந்தையை தரிசித்தவர்கள்: மேய்ப்பர்கள் [ லூக்கா 2:8–17]; சாஸ்திரிகள் [மத்.2:1–12]. இவ்வாறு இயேசுவின் பிறப்பு குறித்து இத்தனை குறிப்புகளைத் தெளிவாகப் பதிவு செய்த ஆவியானவருக்கு பிறந்த நாள் குறித்துப் பதிவு செய்வது கடினமான, முடியாத ஒன்றா?

மேலும், இயேசு பிறந்து எட்டாம் நாளில் குழந்தைக்கு இயேசு என்று பெயரிட்டதும் [லூக்கா 2:21], 12 வயதில் பஸ்கா பண்டிகைக்காக எருசலேம் தேவாலயத்திற்கு சென்றதும் [ லூக்கா 2:42], இயேசு ஏறக்குறைய தன் 30–ஆம் வயதில் ஞானஸ்நானம் பெற்றதும் [லூக்கா 3:21–23 ] சரியாய் குறிப்பிடப்பட்டிருக்க, ஆவியானவரால் இயேசுவின் பிறந்தநாள் ஏன் மறைக்கப்பட்டது? ஒருவேளை சுவிசேஷ புத்தகங்களை எழுதிய 4– ஆசிரியர்களும் சுமார் இயேசு பிறந்து 30 வருடங்களுக்குப் பிறகே இயேசுவோடு தொடர்பு வைத்துக் கொண்டவர்கள்; ஆகவே, இயேசுவின் பிறந்த நாளைக் குறித்துத் துல்லியமாய் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை என்று வாதிடுபவர்கள் வேதம் தேவ ஆவியினால் மனிதர்களைக் கொண்டு எழுதப்பட்டது என்ற அடிப்படை உண்மையை அறியாதவர்கள் [II தீமோ 3:16].

மேலும், சில குறிப்புகள்: இயேசு பிறப்பதற்கு முன் ஏறக்குறைய கி.2948–1998ல் வாழ்ந்த நோவா காலத்தில் நடந்த ஜலப்பிரளயம் குறித்த பகுதியில் சில நிகழ்ச்சிகள், மாதம், நாள்[தேதி] ஆகியவை யோடு பரிசுத்த ஆவியானவரால் குறிக்கப்பட்டிருக்கிறது [ஆதி.7:11; 8:4,5,13,14] . இதைப்போலவே கி.486–464ல் வாழ்ந்த எஸ்தர் ராணியின் நாட்களில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளும் மாதம், தேதியோடு [நாள்] குறிக்கப்பட்டுள்ளது [எஸ்தர் 3:7,13; 8:9,11; 9:1,17 வாசித்துப்பாருங்கள். இப்படி ஆண்டு, மாதம், தேதி குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் இன்னும் சில வேதத்தில் உண்டு. அப்படியென்றால், ஏன்

இயேசு பிறந்த ஆண்டு, மாதம், நாள் குறிக்கப்படவில்லை? ஏன் மறைக்கப்பட்டிருக்கிறது? இதற்கு ஒரே பதில் மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள் [ உபா 29:29]. இதற்கு இன்றைக்கான சரியான எடுத்துக்காட்டானது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாள் பற்றியதாகும். இந்நாள் குறித்து அநேகக் காரியங்கள் வேதத்தில் தெளிவாய் கூறப்பட்டுள்ளது. அவை வருகைக்கு முன் நடப்பது– மத் 24:27,29; வரும்போது நடப்பது– மத் 25:31; வந்ததும் நடப்பது– மத்.24:30; 1 தெச.4:16; முடிவாக நடப்பது– 1 தெச.1:7,8; 4:16,17. ஆனால், வரும் நாள் மறைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் வருகைக்குரிய இயேசுவே, அந்த நாளையும், அந்த நாழிகையையும் என்பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான் [மத்.24:36] என்று திட்டமாய் சொல்லிவிட்டார். ஆனால், கள்ளத் தீர்க்கதரிசிகள் இயேசுவின் வருகை குறித்து பொய்யான காரியங்களைச் சொல்லி அநேகரை வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அன்பானவர்களே! எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாம். இயேசு சொல்வதை கவனியுங்கள், என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்[யோவான் 12:48].

பிரியமானவர்களே! நியாயப்பிரமாணத்தின் காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேல் மக்களுக்கு ஏழு பிரதான பண்டிகைகளை ஆசாரிக்கும்படி தேவன் மோசே மூலம் கட்டளைகள் கொடுத்திருந்தார். மேலும், அவைகளை சரியாய் ஆசரிக்கும்படி அநேக ஆலோசனைகளையும் கொடுத்திருந்தார் [லேவி.2:3]. ஆனால், புதிய உடன்படிக்கை குரியவர்களாகிய தேவனுடைய பிள்ளைகளுக்கு பண்டிகைகளை ஆசரிக்கும்படியான **எந்த ஒரு கட்டளையும்** தேவனால் கொடுக்கப் படவில்லை. அதை பரிசுத்த ஆவியானவர் சீஷர்களுக்கு போதிக்கவுமில்லை; ஆதித்திருச்சபையார் எந்தவொரு பண்டிகையையும் ஆசரிக்கவுமில்லை; அது வேதத்தில் எழுதப் படவுமில்லை. அதே சமயம் சபை கூடி வருதலை... விட்டு விடாதிருங்கள் [எபி.10:25] என்றும், என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றும் கர்த்தருடைய பந்தி ஆசரிப்பது குறித்த கட்டளையை ஆவியானவர் சீஷர்களுக்கு [1கொரி.11:23–29] நினைப்பூட்டினார்.

அன்பான தேவ பிள்ளைகளே! வேதம் தேவனுடையது ஏசா.51:4,7]. தேவ ஆவியினால் அப்போஸ்தலர்களைக் கொண்டு எழுதப்பட்டது என்ற பயபக்தியுடன் வேதத்தில் வெளிப்படுத்தபட்டுள்ள உபதேசங்களுக்கு மட்டும் கீழ்ப்படிவோம். தேவ வார்த்தைக்கு மிஞ்சி எண்ணவேண்டாம். நாம் கிறிஸ்தவர்களாய் தேவனுடைய பிள்ளைகளாய் [ஞானஸ்நானத்தின் மூலம்] பிறந்திருக்கிறோம். நம்முடைய இந்த பிறப்பில், உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானம், மனுஷர்மேல் பிரியம் உண்டாகும் வாழ்க்கை வாழ்ந்து தேவனை மகிமைப்படுத்துவோம்! ஆமென்!!

# ஆதாமினால் மரணமும், ஆண்டவரால் ஜீவனும்!

Bro.பாண்டியன்

**அ**ன்பின் தேவ பிள்ளைகளுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நாம் அறிந்தபடி ஆதாம் என்னும் ஒருவனுடைய மீறுதலினாலே பாவம், மரணம், வேதனை மற்றும் சாபம் போன்றவை இவ்வுலகத்தில் பிரவேசித்தது. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் அதைப் புசிக்கிற நாளில் சாகவே சாவாய் என்று தேவன் கட்டளையிட்டார் ( ஆதி 2:17 ). இந்த ஒரு கட்டளையை அவன் மீறினதால் பிற்பாடு வந்த நியாயப்பிரமாணத்தில் சுமார் 613 கட்டளைகளை தேவன் கொடுக்க வேண்டியதாயிற்று! ஆதாம் அந்தக் கனியைப் புசித்த பின்பு சாகாமல் சுமார் 900 வருடம் உயிரோடிருந்தான் என்று வாசிக்கின்றோம். ஆகவே, ஆதாமிற்கு புசித்த நாளில் ஏற்பட்டது... தேவனை விட்டு பிரிவு ஏற்படுத்திய ஆத்தும மரணமாகும்.

இப்படியாக ஒரே மனுஷன் பாவத்தினாலே மரணம் வந்ததுபோல, எல்லோரும் பாவஞ் செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது ( ரோமர் 5:12 ). ஒருவேளை ஆதாம் அந்த மீறுதலை செய்யாமல் இருந்தால் தேவனோடே உள்ள மனிதனின் உறவும் ஐக்கியம் தொடர்ந்து இருக்கும். ஆனால், பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும் என எசேக் 18:4ல் வாசிக்கின்றோம். ஆதாம் செய்த பாவம் ஏன் மற்றவரை பாதிக்கின்றது? எனக் கேட்டால் அவன் புசித்த நன்மை தீமை அறியும் கனியினால் தேவன் படைத்த சாயல் இழந்து மனிதனின் சுபாவம் மாறிவிட்டது. மனிதனுக்கு தீமை அதாவது பாவம் செய்வதில் ஆர்வம் வந்ததால் எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்கள் ஆனார்கள். அந்த தேவ சாயலை இழந்து போன மனுக்குலத்திற்கு தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார் என்றார் இயேசு.

தேவன் தந்த ஆளுகை, ஆசீர்வாதங்கள், ஆனந்தத்தை மனுக்குலம் இழந்து இவ்வுலகில் மரணம், வேதனை, சாபம் போன்ற காரியங்கள் பிரவேசித்தது. இவைகளைச் சற்று இங்கு ஆராய்வோம். பாவம் செய்வதில் ஒருவனுடைய கண்கள் முக்கிய பங்காற்றுவதாக ஆண்டவர் சொல்வதை கவனியுங்கள் கண்கள் சரீரத்தின் விளக்காக இருக்கிறது, உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் கெட்டதாயிருக்கும் (மத் 6:22,23). ஏவாள் அந்தக் கனியைப் புசிக்கும் முன்பு வேதம் சொல்வதை கவனித்தால், அப்பொழுது ஸ்திரீயானவள் அந்த

விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, பறித்து புசித்துத் தன் புருஷனுக்கும் கொடுத்தாள். ஆனால், இவ்வுலகம் கண்களினால் வரும் ஆபத்தை உணருவதில்லை, சாத்தான் செய்த அதே தந்திரத்தைப் போலவே இன்றைக்கும் திரைப்படங்கள், விளம்பரங்கள் போன்றதைப் பார்க்கும்படி மனிதனை தூண்டி இச்சமுதாயமும் சீரழிந்துக் கொண்டிருக்கிறது.

மரணத்தைத் தொடர்ந்து இவ்வுலகில் பிரவேசித்தது வேதனை (ஆதி 3:16). ஸ்திரீயானவள் முதலில் வஞ்சிக்கப் பட்டதால் அப். உபதேசத்தில் சபை கூடி வரும்போது அவர்கள் போதனை செய்யக்கூடாது என்ற கட்டளையை பார்க்கிறோம் (1கொரி.14:34, 1தீமோ. 2:11-14). யுத்த சமயத்தில் தேவ பாதுகாப்பு இருந்ததால் எதிரிகள் இஸ்ரவேலரைக் கண்டு பிரசவ வேதனைப் பட்டார்கள் (சங்.48:6).ஆனால், தேவ ஜனங்கள் தேவனுக்குக் கீழ்படியாமற்போன போது இவர்கள் எதிரிகளைக் கண்டு கர்ப்பவேதனை (எரே 6:24) அடைந்தார்கள். பிற்பாடு சிறைபிடிக்கப்பட்டபோதும் அந்நிய தேசத்தில் இவர்கள் வேதனைப் பட்டார்கள். ஆனால், ஜனங்கள் வேதனைப்படுவது தேவனுக்குப் பிரியமாய் இருந்தது இல்லை. அதனால் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் சீயோனுக்கு வருவார்கள், நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேல் இருக்கும், சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம் என்றார் (ஏசா.35:10). இந்த ஆசீர் இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் சேரும்போதும் கிடைக்கின்றது. இருதயம் நொறுங்குண்ட வர்களை குணமாக்கவே இயேசுவை தேவன் அனுப்பினார் (லூக்கா 4:18).

ஆதாமினால் மரணம், வேதனையை தொடர்ந்து சாபம் வந்தது. ஆதி 3:17,18ல் தேவன் ஆதாமிடம் நீ உன் மனைவிக்குச் செவிகொடுத்து நான் விலக்கின கனியைப் புசித்தபடியினால் பூமி உன்னிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும், வருத்தத்தோடே அதின் பலனை புசிப்பாய், அது உனக்கு முள்ளும், குறுக்கும் முளைப்பிக்கும் என்றார். பிற்பாடு இஸ்ரவேல் ஜனங்களிடம், இதோ உங்கள் முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன், கீழ்படிந்தால் ஆசீர்வாதம் மீறினால் சாபம் நேரிடும் என்றார் (உபா.11:26- 28). ஜனங்கள் மீறினதால் செம்மையானவனாக உண்டாக்கப்பட்ட மனிதன் அநேக உபாயத் தந்திரங்களை தேடிக்கொண்டான்.

எனவே, சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்கள், மனுஷரின் பிரயாசங்கள் எல்லாமே மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாய் இருக்கிறது (பிர.5:17). நோவா பிறந்தபோது அவன் தகப்பன் லாமேக்கு சொன்னது சபிக்கப்பட்ட இந்த பூமியில் தனக்கு இவன் உதவியாய் இருப்பான் என்பதே (ஆதி 5:29). அதேபோல சிறை பிடிப்பிற்கு காரணம் தேவனுக்கு விரோதமாக பாவஞ் செய்தபடியால் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிற சாபம் எங்கள் மேல் வந்தது என்கிறான் தானியேல்.

இப்படியாக, ஆதாமினால் வந்த சாபம் நம்மையும் பாதிக்கின்றது. பயிர்கள் மத்தியில் இருந்த களைகளை பிடுங்க முயன்றவர்களிடம் அறுப்பு வரையில் வளர விடுங்கள். முடிவில் பிடுங்கப்பட்டு அக்கினிச் சூளையிலே போடுவார்கள் அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (சாபம்) மத்.13:42. இது சபையில் இருப்பவர்கள் இருக்க வேண்டிய பரிசுத்த நடக்கையை குறிக்கிறது. ஏனெனில், நியாயத்தீர்ப்பு முதலாவது தேவனுடைய சபையில் துவங்குகிறது என்கிறார் பேதுரு. மேலும், நம் கர்த்தராகிய இயேசுவினிடம் அன்பு கூறாதவன் சபிக்கப்பட்டவனாய் இருக்கின்றான் என்கிறான் பவுல். வெளி.21:4ல் இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலும் இல்லை, வருத்தமும் இல்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின என்று பரலோகில் ஒரு சத்தம் விளம்பினது என வாசிக்கின்றோம். ஆனால், ஆதாமினால் பிரவேசித்த இவைகள் நம் கர்த்தராகிய இயேசு மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்ற வேத வாக்கியத்தின்படி நமக்காக சாபமாகி நம்மை சாபத்திற்கு நீங்களாக மீட்டுக்கொண்டார் (கலா.3:13). தேவன் தம்முடைய குமாரன் மூலமாய் நமக்கு எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானத்தை வாக்கு பண்ணியிருப்பதால் நாம் கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாய் இருப்போமாக. கர்த்தராகிய இயேசுவின் கிருபை எப்போதும் நம்மோடு இருப்பதாக. ஆமென். ✝

**தங்களுடைய தேவபக்தியை பாடல் மூலமாக வெளிப்படுத்தின ஸ்திரீகள்.**

| | | |
|---|---|---|
| 1. மிரியாம் | – | யாத்திராகமம் 15:20–22 |
| 2. தெபொராள் | – | நியாயாதிபதிகள் 5:1–31 |
| 3. அன்னாள் | – | 1சாமுவேல் 2:1–10 |
| 4. எலிசபெத் | – | லூக்கா 1:42–45 |
| 5. மரியாள் | – | லூக்கா 1:45–55 |

## கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்
## "இசைக்கருவிகள்"

சகோ.ஜே.ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை.

( சென்ற மாத தொடர்ச்சி )

IV. **சிலர் ஆராதனை அல்லாத சுவிசேஷக் கூட்டங்கள் மற்றும் வேறு குடும்ப நிகழ்ச்சிகளில் இசைக்கருவிகள் பயன்படுத்தலாம் என்கிறார்கள். எல்லாவற்றையும் எந்த நிகழ்ச்சியாயிருந்தாலும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் (அதிகாரத்தில்) செய்தால் அவர் இசைக்கருவிகளை ஏற்றுக்கொள்கிறாரா? ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

A. வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். கொலோ 3: 17.

B. அப்போஸ்தலர் நடபடிகள் 2, 7, 14, 17 ம் அதிகாரங்களில் பொதுவான கூட்டங்களாக பேசியுள்ளார்கள். அங்கும் இசைக்கருவிகள் பயன்படுத்தப்படவில்லை.

C. சிலர் வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகளை சுட்டிக்காட்டுவார்கள்.

1. இது யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டது. இவற்றில் சொல்லப்பட்ட அடையாளங்கள், நிகழ்ச்சிகள் நேரடியான அர்த்தம் கொள்ளமுடியாது. இந்த நிகழ்ச்சி பரலோகத்தில் நடந்ததாக எழுதப்பட்டுள்ளது. வெளி.4:1.
2. வெளி.5:8, அந்தப் புஸ்தகத்தை அவர் (கிறிஸ்து) வாங்கின போது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து என்று எழுதப்பட்டுள்ளது.
3. இந்த நிகழ்ச்சியானது 4 ம் அதிகாரத்தின் தொடர்ச்சியாயிருக்கிறது. நான்காம் மற்றும் ஐந்தாம் அதிகாரங்கள் தேவனுடைய மகத்துவத்தையும், கிறிஸ்துவானவர் பெற்றுக்கொண்ட அதிகாரத்தையும் அவருடைய கனத்தையும் பற்றி முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்குச் சொல்லப்பட்டது. அது நமக்கும் சொல்லப்படுகிறது.
4. வெளி.14: 2 ல் ஓசையைப்போலிருந்து என்று எழுதப்பட்டுள்ளது, நேரடியாக சுரமண்டலம் அல்ல. இவற்றை நடைமுறைக்கு எடுத்துக்கொள்ள முடியாது. அப்படியிருந்ததானால் முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் இசைக்கருவிகளை பயன்படுத்தி இருப்பார்கள். அதை புதிய ஏற்பாட்டில் பதிவு செய்திருப்பார்கள். அப்படி ஏதும் இல்லையே.

5. இதில் சில கேள்விகள் உள்ளன: 24 மூப்பர்கள் பரலோகம் சென்றார்களா? பரலோகத்தில் சுரமண்டலத்திற்கான மரம் உலோகம் போன்றவை இருக்குமா? இவைகளை யோசிக்க வேண்டும்.

D. மனிதகுலம் இரட்சிக்கப்பட, நித்தியஜீவன்பெற தேவையான எல்லா சத்தியத்தையும் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார், 2பேது. 1:3

1. இயேசுகிறிஸ்து அந்த எல்லா சத்தியத்தையும் தம் அப்போஸ்தலருக்கு போதித்தார். யோவா.15:15.

2. அப்போஸ்தலர்கள் இந்த எல்லா சத்தியத்தையும் பரிசுத்த ஆவியானவரின் நினைப்பூட்டுதலோடு மக்களுக்கு போதித்தார்கள். யோவா. 16:13–15; எபி. 2:3, 4; அப். 20:20, 26.

3. எல்லா சத்தியத்தையும் தேவன் வெளிப்படுத்தினபோது இசைக்கருவிகள் பற்றி ஒன்றும் சொல்லவில்லைய, ஏன்? அது அவருடைய சித்தமல்ல, இருந்தால் அவரே சொல்லியிருப்பாரே.

E. சிலபேர் புதிய காரியங்களை எப்பொழுதும் விரும்புகிறார்கள், ஆனால் தேவனும், அவருடைய சத்தியமும் மாறவேயில்லை. கிறிஸ்து பரிபூரணமாக்கப்பட்டார், எபி. 5:9.

**முடிவுரை:**

1. அவருடைய புதிய ஏற்பாட்டின் உபதேசம் பரிபூரணமானது என்று யாக். 1 : 25 கூறுகிறது. பரிபூரணமானதை எப்படி மாற்றகூடும். மாற்றிக்கொண்டால் அதன் பரிபூரணத்தைக் கெடுக்கிறோம்.

2. தேவன் சொல்லாததை செய்யக்கூடாது, அவர் சொன்னதை செய்யாமல் விட்டுவிடக்கூடாது, 1சா. 15 : 22, 23.

3. இசைக்கருவிகள் பயன்படுத்த கர்த்தர் சொல்லாதபோது அதை பயன்படுத்துவது பாவம், லேவி. 10:1–3.

4. அது நியாயப்பிரமாணத்தில் ஒரு சட்டமாயிருக்கிறபடியால் ஒன்றை செய்துவிட்டு மற்ற 612 சட்டங்களைக் கைக்கொள்ளாமல் போவதும் பாவமே, கலா. 3:10; 5:3.

5. நாம் நீதியின் வழிகளைத் தேடுவோமாக: அவர் சொல்லாததை செய்துவிட்டு, நான் கர்த்தருக்காக செய்தேன் என்பதை தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார். அது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதற்குச் சமம். கீழ்ப்படிதலே உத்தமம்.

6. இன்றைக்கு நாம் ஆவியோடும் உண்மையோடும் தேவனை தொழுதுகொள்ளவேண்டும். யோவா.4:23–24. அதில் இசைக்கருவிகளுக்கு இடமில்லை. ஆமென்.


**"Registered" with RNI No: TNTAM/2006/20446**
Postal regn. No. Erode/26/2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

# எங்களது இதர வெளியீடுகள்

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்


**தபால் செலவிற்கு**
**பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**




















## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

## திருமறை தியானம்

**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

செவ்வாய் காலை 6:30 - 7:00 மணி
வெள்ளி காலை 6:30 - 7:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.